உ

பரமபதி துணை.

யாகோபு

திருவாய்மலர்ந்தருளிய

சுண்ணம் ௩௱.

மதுரை வித்துவான்,

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதித்தபடி,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்மது

மதுரை வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார் தெரு,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1938

இதன் விலை காபிரைட் ரூ.

இரண்டாவது பதிப்பு

500—காப்பிகள்.

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

சுண்ணம் நூ.

ரகுமானின் பாதமலர் துதியேசெய்து
நபிமாரை அனுதினமும் போற்றி செய்து
கைகட்டி வணங்கியே சுண்ணக்காண்டம்
கனிந்துமே அறுநூறு முன்னேபாடி
வையகத்தி லறுநூறைத் தான்குருக்கி
வகையாக யிந்தநூல்முன் னூர்தன்னில்
மெய்யாகச் சுண்ணங்கள் வைக்கும்பாகம்
மேன்மைபெறப் பாடினேன் விருப்பாய்த்தானே.(1)

விருப்பமாய்க் களங்கோடு செந்தூரங்கள்
விதமான காரீயச் செந்தூரங்கள்
உருப்பமாய்த் தாளகமுஞ் சேர்க்குமார்க்கம்
உறுதிபெற்ற துத்தத்தின் சுண்ணத்தோடு
திருப்பாகக் கைபாக வரிசையோடு
செகத்திலென் பேர்விளங்கச் செப்பினேன்யான்
பொருப்பதனில் வீற்றிருந்து சொன்னேனப்பா
பேர்பேரிய நபிமாரைப் பேசினேனே. (2)

பேசினே னித்தமுன் னூறு தனைக்குருக்கிப்
பிரித்துமே நூற்றைம்பத் தஞ்சதாக
வாசினையாய்ப் பாடினே னதிலேதானே
வகையாகக் கருவித்தை களங்கஞ்சுண்ணம்
காசிபெற மெழுகோடு தயிலமெல்லாம்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் சரியதாக
பாசிதனைத் தள்ளிவிட்டு நீரைத்தானும்
பகுத்தெடுத்துச் சமையல்செய் ததுபோற்பாரே. (௩)

பாரேதா னிந்தமுன் னூறு தன்னிலேதான்
பகுத்தறிந்து சீவனங்கள் செய்யவேண்டி
காரே நீ முன்னே தான் வங்கந்தன்னைக்
கருத்துடனே வைத்துமே செம்புதன்னில்
தீரே நீ பாய்ச்சிட்டு ஊதிப்போட்டு
நினைவாக வித்துமே செலவுசெய்து
கூரேது சீவனங்கள் பண்ணிக்கொண்டு
கோடிலெட்சம் வேலைபின்னே செய்துகொள்ளே ()

பண்ணிட்டு நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பதிவாக வங்கமென்ற ராஜாதன்னை
நண்ணிடவே தொழுதுகொள்ளு பின்னே நன்றாய்
நலமான தாளகத்தைத் தொழுதுபோற்று
கன்றுவிட்டுப் பால்கறந்தாப் போலேதானும்
கடிதான கைபாக வரிசையாக
உன்னிடத்துப் போலேநீ செய்துகொண்டு
உணர்ந்தபடி யாகோபு வோதினேனே. (5)

ஓதினேன் வடமொழியைப் பிரித்துப்பார்த்து
உறுதிபெறக் கைபாக வரிசையாக
நீதியாய்ப் புத்திதனிற் பதிந்துதேறி
நிலைக்கவே வாதமென்ற வெள்ளந்தன்னை
சோதிபெறக் கண்டுமே சொன்னேன்பாரு
தொல்லுலகில் ரசவாதி பிழைக்கவென்று
கோதிவிடுங் கிளிபோலே கண்டுகொள்ளு
கூறினேன் பேர்விளங்க யாகோபுதானே. (6)

வங்கச் சுண்ணம்.

விளங்கவே அயச்சட்டி அடுப்பிலேற்றி
வெற்றிபெற வங்கமது சேருஒன்று
தளம்பவே சட்டியிட்டு ஐந்தாங்காய்ச்சல்
தனியான பொற்றலையை யிடையேயிட்டு
உளங்குளிரக் கொஞ்சமதா யிட்டுநன்றாய்
உறுதிபெற யிடைக்கிடைதா னிட்டுநீயும்
துளம்பெறவே வைத்திடுநீ சாமமொன்று
துடியாக யெடுத்துப்பார் மஞ்சளாமே. (7)

வங்கச் சுண்ணச் செயநீர்.

மஞ்சளாம் வங்கமென்ற ராஜாதானும்
மயமாகக் கொஞ்சமெடு மஞ்சள் தன்னில்
அஞ்சாம லுரைத்துவிடு சிவந்துபோகும்
அடைவாகக் கடுஞ்சுண்ணம் வங்கச்சுண்ணம்
தஞ்சமாய்க் கல்வத்திற பொடித்து நீயும்
தடையில்லாச் சாரமதை யிடையேயிட்டு
துஞ்சாமல் பொடிபண்ணிப் பீங்கானிலிட்டுத்
துடியாகப் பட்சமொன்று பனியில்வையே. (8)

பனியில்வைக்கப் பளபளெனச் செயநீராகும்
பாங்காக யின்னீரில் வீரமிட்டு
தனியாக நீரிருத்துச் சீசாதன்னில்
தாக்கியடை பின்புதான் சாற்றக்கேளு
வளியாக அடியில்நின்ற புட்டிதன்னை
வடிவாகக் கல்வமிட்டு வளமைகேளு
கனிபோலே கற்றாழை நீரிலாட்டிக்
காரியமாய் வில்லைதட்டிக் கதிரில்வையே. (9)

வங்கத் துத்தச் சுண்ணம்.

கதிரில்வைத்துப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளு
பதிவாகப் புடம்போட்ட காரியத்தில்
பத்தியாய் மடையனைத்தான் யிடையேசேர்த்து
விதிபெறவே கல்வமிட்டுப் புகைநீர்கேளு
விதமான வெடியுப்புப் டலமூப்பத்து
நதியாகச் சீனமது யிருபத்தைந்து
நாடியே கல்வமிட்டுப் பொடித்திடாயே. (10)

பொடித்திட்டுக் கடத்திலரை வாசியிட்டுப்
போக்கோடே வாலையென்ற சட்டிமூடி
வடித்திட்ட முன்னீரைத் தள்ளிப்போட்டு
வகையான பின்னீரை வாங்கி நீயும்
தடித்திட்ட வங்கமென்ற துத்தந்தன்னில்
தானிட்டு அரைத்துமே வில்லைதட்டி
நடித்திட்ட கதிரில்வைத்துப் புடமுமிட்டு
நாடியெடு பின்புதான் நாடிக்கேளே. (11)

தாளகச் செந்தூரம்.

தாடியே தாளகமுஞ் சேர்தாஞென்று
நல்லசுண்ணந் தன்னிலிட்டுப் பாணிவிட்டு
கூடியெரி ஒருசாமஞ் சுத்தியாச்சு
குணமாக யெடுத்துஅயச் சட்டியிட்டு
பாடியே முன்செயநீர் சுருக்குப்போடு
பதிவாக யிருசாமஞ் சென்றபின்பு
தேடியே நலமாகப் பிரித்து நீயும்
திட்டமாய் முன்போலே வங்கம்வாங்கே. (12)

வாங்கியே கல்வமிட்டுப் புகைநீராட்டி
வடிவாக ஒருபங்கு தாளகத்தில்
தேங்கியே புகைநீர்விட் டரைத்தவங்கம்
திடமாக நாலுபங்கு கவசங்கட்டி
பாங்கியே காயவைத்துப் புடமுஞ்சேவல்
பதிவாக யிட்டுமே எடுத்துக்கல்வம்
தூங்கியே திரியாதே புகைநீராட்டித்
துடியாக யிருசாம மரைத்திடாயே. (13)

அரைத்துமே பின்புதான் தாளகத்தில்
அடைவாகக் கவசமிட்டுக் கதிரில்வைத்து
பரைத்துமே முன்போலே புடமுமிட்டுப்
பதிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
தரைத்துமே புகைநீரை விட்டுச்சாமம்
தணையரைத்துப் பின்புதான் தாளகத்தில்
நரைத்துமே கட்டியே கதிரில்வைத்து
நலமாக முன்போலே புடத்தைப்போடே. (14)

குருசுரவி ஷை சுத்தி.

புடம்போட்டு யிப்படிநால் தரமுமானல்
போரான கருஞ்சிவப்பு மாகுங்கண்டீர்
நடம்போடு தபிமாரைத் தொழுதுபோற்றி
நலமாகக் குருவைத்தா னெடுத்துப்பின்பு
வடம்போடு துருசதுவும் பலமும்பத்து
வாகான யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
கடம்போடு உலாவைத்து ஒட்டக்காய்ச்சிக்
காரமிட்டு உருக்கிடவே ரவியுமாமே. (15)

ஆமேதான் ரவிதன்னைத் தகடுதட்டி
அடைவாகக் கழுதையுட அமுரிதன்னில்
நாமேதான் வெடியுப்பைக் கரைத்து நீயும்
நலமாகப் பழுக்கவே காய்ச்சித்தேய்ப்பாய்
காமேதான் தேய்த்துமே உருக்கிக்கொண்டு
கனிவாகச் செம்பினிடை செந்தூரத்தை
பூமேதான் தாக்கிப்பார் பொடியாய்ப்போகும்
புகழ்ச்சியைப் பின்புதான் பேசக்கேளே. (16)

பேசவே வெள்ளியது பலமூன்று
பேராக நொருங்கினதோர் செப்புஒன்று
நாசவே கொடுத்துருக்கப் பொடியாய்ப்போகும்
நலமாகத் தங்கமொன்று சேர்த்துஊத
பாசமாய் மாத்துதான் யெட்டுமாகும்
பதியவே உப்புக்குங் காவிக்குந்தான்
வாசமா யோடாது நல்லமார்க்கம்
வகையாக யாகோபு சொன்னவாறே. (17)

சொன்னதொரு வாதத்தில் வங்காசன்
சுருதிபெற யில்லாது போனூர்க்கேளு
நன்னயமாய் வாதமென்ற சொல்லேயில்லை
நிலமான சத்துமில்லை களங்குமில்லை
இன்னிலத்தில் வர்ணமில்லை யியல்புமில்லை
இதமான சொர்ணமில்லை யின்பமில்லை
கன்னல்போல் கொட்டாவி யிட்டுயிட்டுக்
கலங்கியே புலம்பியே அலைகுவாரே. (18)

அலையாமல் வாதத்தின் கருவைக்கேளு
அடைவான வங்கமொன்று தங்கமொன்று
நிலையான நாகமொன்று துருசியொன்று
நேரான அயமதுவும் இவைகள்சேரில்
கலையாமல் தங்கமது வாகுங்கண்டாய்
கணக்கதுபோல் சேர்ந்தாக்கால் கனிகளாகும்
விலையாகும் வெகுவித்தை யிதிலேயாச்சு
வித்தகராம் யாகோபு விளம்பினூரே. (19)

விளம்பவே புகைநீரு யில்லாதுபோனால்
விதமான சத்துக்கள் பலிதமில்லை
துளம்பவே கைபாக வரிசைதப்பில்
தொல்லுலகில் ரசவாதம் பொய்க்குங்கண்டீர்
பழங்கதைபோல் பேசாதே பருவமாகப்
பார்த்துமே செய்திடவே பலனுமாகும்
உளங்குளிரும் ரசவாத மேவலாகும்
உற்றுணர்ந்து யாகோபு ஓதினாரே. (20)

ஓதினார் சிலதுபேர் உலகந்தன்னில்
ஓதினதோர் சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
நீதியாய் விசாரித்திதனைத் தெரியாதாலே
நிலையில்லை சாஸ்திரத்தைப் பொய்யேயென்று
கோதியே கிளிபோலே சாஸ்திரத்தைக்
குணமில்லை யென்றுமே சொல்லிப்பின்பு
நாதியா யாணுவத்தால் சரக்கைப்பார்த்து
நான்செய்வே னென்றுமே சொல்லுவாரே. (21)

சொல்லியே ஆணுவத்தால் உலகத்திற்றான்
துயரமொடு வாதியைத்தான் கண்டுபேசி
வெல்லவே புல்லர்கள்தான் பத்துப்பேராய்
விதமாகக் கூடியே சுடுவார்கோடி
நல்லநூல் தன்னையே பாராமற்றான்
நாடியே பொய்சொல்லிப் புலம்புவார்கள்
வெல்லரிது வாதங்கள் வந்தாக்கேளு
வெளியிலே சொல்வார்கள் விருப்பமாமே. (22)

விருப்பமாய் வாதங்கள் வந்தபேர்கள்
விதமாகப் பயித்தியமாய்த் திரிவாரப்பா
அருப்பமாய்ப் பேசார்களுலகத்திற்றான்
அடைவாக நபிமார்போ லிருப்பாரப்பா
பொருப்புக்கு ளொளிந்திடுவார் புலம்பார்பேசார்
பொறுமையது மிகவுண்டு பொய்பேசார்கள்
இருப்பாக யிருந்துமே செய்துவித்து
இதமாக உண்டுடுப்பார் உறுதிதானே. (23)

உருதியாம் அறியாத வாதிமார்கள்
ஒருத்தருடன் சொல்லியே புலம்பிப்பின்னும்
அருதியாய் நான்கண்டே னென்றுசொல்லி
அலைந்துமே வயிரவன்போற் சுத்திசத்தி
கருதியே பணமெல்லாஞ் கட்டுக்கெட்டு
கனிவாகப் பிச்சையெடுத் துண்டுவுண்டு
பருதிபோற் சுழன்றுமே மாளுவார்கள்
பத்தியில்லார் செய்கின்ற மார்க்கந்தானே. (24)

மார்க்கமாய்ப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
மாயங்கள் சொல்லார்கள் மார்க்கமாக
ஏர்க்கவே யிந்தநூல் தன்னைப்பார்த்து
ஏழைமதி போகாமல் யியல்புசெய்வார்
பார்க்குள்ளே தங்கத்தைப் பண்ணிவித்து
பத்தியாய்ப் பாகமாய்ச் செய்வார்பாரு
தூர்க்குள்ளே நபிமார்கள் போலிருப்பார்
துயரமற்றுத் திரிவார்கள் சுருதியாமே. (25)

வங்கச் சுண்ணம்.

சுருதியா யின்னமொரு வங்கமார்க்கம்
சொல்லுகிறேன் நபிமார்க ளாடும்நேர்மை
அருதியாய்க் காரீயம் பலமும்பத்து
அடைவான அயச்சட்டி தன்னிலிட்டு
கருதியே உருகையிலே வெடியைத்தாக்கு
கணக்காக யிடைசமனுய்ப் போட்டுக்கிண்டு
பருதிபோற் சிவந்துநின்ற பருவம்பார்த்துப்
பத்தியொடு சுண்ணும்பாம் பாரிலோர்க்கே. (26)

பாரிலே வங்கமென்ற சுண்ணந்தன்னைப்
பதிவாக மஞ்சள்தனி லிட்டுப்பாரு
காரியமாய்க் குருவிரத்தம் போற்சிவக்கும்
கணக்காகச் சுண்ணமதை யெடுத்துக்கல்வம்
ஊரியே யிட்டுமே சொல்லக்கேளு
உருதிபெறக் கடையில்விற்கும் ரசச்செந்தூரம்
வாரியே வாங்கிவந்து நிரையைக்கேளு
வண்மைபெற முன்சுண்ணத் திடையேசேரே. (27)

இடையாகக் கல்வமிட்டுப் புகைநீர்விட்டு
இழுத்தரைத்து வில்லைதட்டிக்கதிரில்வைத்து
நடையாகச் சேவலென்ற புடத்தையிட்டு
நாடியே யெடுத்துமே கல்வத்திட்டு
படையாகப் புகைநீரை விட்டுச்சாமம்
பதியவரை வில்லைதட்டிக் கதிரில்வைத்து
விடையாக முன்போலே புடமுமிட்டு
விதமாக யிப்படிக்குப் புடமும்நாலே. (28)

நாலுபுடம் போட்டெடுக்க முருக்கப்பூப்போல்
நலமாகச் செந்தூர மாயிருக்கும்
காலுயெடு துருசினுட செய்புயெட்டில்
கணக்காக ஒன்றிட்டு உருக்கிப்பாரு
பாலுபோல் வெளிறியே உடையுங்கண்டாய்
பக்குவமா யுடைத்துமே மதியிலெட்டு
சாலவே ஒன்றிட்டுத் தங்கமொன்று
சாரித்துச் சேர்த்துமே ஊதிடாயே. (29)

ஊதியெடு மாத்துத்தான் சொல்லக்கேளு
உறுதியா யெட்டரைதா னணிக்கொக்கும்
சாதிதன்னிற் சொல்லாதே தங்கந்தன்னைத்
தாட்டிகமாய் வித்துமே செலவுசெய்து
நீதியாய் நபிமாரைப்போலிருந்து
நிலைபெற்று உண்டுடுத்தி நினைவாய்நின்று
வேதியர்போல் நாளொன்றுக் கைந்துநேரம்
விதமாகத் தொழுதிடுநீ வேண்டிக்கொள்ளே. (30)

வேண்டியே தன்னிலையில் நின்றுநீயும்
விதமாகச் செந்தூரம் தேனிற்றானும்
கண்டுமே பணவிடைதான் வீதம்நித்தியம்
கனிந்துமே மண்டலந்தா னுண்ணும்போது
தூண்டியே கடுகுநல் லெண்ணெய்கைப்பு
துடியான எள்ளுமொச்சை பயறுதள்ளே
காண்டியமாய்க் காயமது யிரும்புத்தூணும்
கடிதாகுங் கற்போலாங் காயந்தானே. (31)

காயந்தா னிப்படிக்கு யிருக்கிக்கொண்டு
கனகமது பண்ணியே உண்டுதேறு
தாயன்மார் சொன்னபடி நூலைப்பார்த்து
நலமாக அறிந்துமே சோதித்துத்தான்
மாயமாய்ச் செய்துமே கடையில்வித்து
வடிவாக வறுமைபோ லுண்டுதேறு
சாயமது ரசவாதந் தரணியோர்க்குச்
சரிவரவே சோதித்தாற் பலனுமாமே. (32)

பலனாகச் சுண்ணமென்ற காண்டத்துள்ளே
பத்தியாய்ச் சோதித்து வங்கச்சுண்ணம்
பிலனாக வைத்துமே பாகமாகப்
பேதலித்துப் போகாமல் மனதையூணி
நலமாக வைத்துமே செம்பிற்றூக்கி
நாட்டியே வித்துமே செலவுசெய்து
கலனாக உண்டுடுத்தித் தொழுதுதேறு
காரியமா யாகோபு சொன்னவாறே. (33)

சொன்றொரு நூல்தனிலே வாதம்பொய்யோ
சுருதிதனை யறியாத மூடர்தானும்
நன்னயமாய்ப் பேசுவா ருலகநீதி
நாட்டிலே சாஸ்திரத்தை அறியமாட்டார்
கன்னல்போல் ருசியாகப் பேசுவார்கள்
கணக்கறியார் காரியத்தைக் காணமாட்டார்
இன்னிலத்திற் புலம்பியே திரிவாரப்பா
இழுக்கான வாதிதான் சோதிக்காரே. (34)

சோதிப்ப தெதுவென்றாற் சொல்லக்கேளு
சுயமான வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதியாய் ரசவாத மேவல்கேட்கும்
நிலைக்குமே செம்புதான் தங்கமாகும்
பாதியிலே ரசவாதம் பார்த்துவிட்டுப்
பதைத்துமே யில்லையென்பார் பாரிலோரும்
ஊதியே வெகுபாடு பட்டுப்பட்டு
உலுத்தரவர் சாஸ்திரத்தைப் பாரார்தானே. (35)

சாஸ்திரத்தைப் பார்த்துமே கருவையெண்ணி
சரியாக எல்லா நூல் தன்னைப்பார்த்து
சேத்திரமா யெல்லாமும் ஒத்துச்சேர்த்துச்
செயமாகப் பாகமாய்ச் செய்தாற்பாரு
பாத்திரமாம் பொன்னாகும் பணமுமாகும்
பதிவாக உண்டுடுக்க வாகும்பாரு
சூஸ்திரமுட் சாஸ்திரமும் ஒத்துப்பாரு. (36)
சுருக்காக வேதைவருந் தோய்வுமாமே

ஆமேதான் ஆனந்தான் காய்ச்சும்போது
அடைவாகப் புளிமிஞ்சில் புளித்துப்போகும்
நாமேதான் உப்புவது மிஞ்சிற்றாேல்
நாடியே நாவுக்குக் கைப்புமாகும்
வாமேதான் காரமிஞ்சில் காரமாகும்
வடிவாக நாவுக்கு ருசியிராது
பூமேதா னிப்படிக்குச் சரக்கைப்பார்த்தால் (37)
பூலோக மெல்லாமும் வாதமாமே.

வாதந்தான் வருகவென்றாற் சொல்லக்கேளு
வகையாக வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நீதமாம் வாதவரு மூடனேதானே
நிலையாகும் புடமிறங்கும் நேர்மைபாரு
காதமாம் நடந்தாலோ வழிகள்தோணும்
கடத்தேற வேணுமென்றாற் கருவாய்ப்பாரு
வேதத்திற் சொன்னதிந்த மார்க்கந்தன்னை (38)
விருதுபட யாகோபு சொன்னவாறே.

வங்கச் சேந்தூரம்.

சொன்னதோ ரின்னுமொரு வங்கங்கேளு
சுளுவாகு மிதுலெகுவு முன்னேபாரு
நன்னயமாய் வங்கமது பலமும்பத்து
நாடியே அயச்சட்டி தன்னிலிட்டு
கன்னல்போ லாவாரைப்பஞ்சாங்கந்தான்
கருத்துறவே பொடியாக்கி முகத்திற்றூவு
இன்னிலத்திற் குருக்கியே சிவக்கும்பாரு
இதமாகக் கல்வமிட்டுப் பின்புகேளே. (39)

பின்புதான் கற்ருழைப் பாலாலாட்டிப்
பிலக்கவே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நன்மைபெறப் பெரியபுடம் போட்டெடுத்தால்
நலமாகச் சிவப்பாகும் நாடிக்கேளு
அன்பாகத் தாளகமும் பலமூம்பத்து
அடைவாகப் புகைநீராற் சுருக்குத்தாக்கு
உன்பாகச் சாமமொன்று தாக்கிப்பாரு
உண்மையாய்க் கட்டுமது உருதிபாரே. (40)

உறுதியாய் வங்கத்தைக் கல்வமிட்டு
உத்துமே கற்ருழை நீரிஞலே
அருதியா யரைச்சாம மானபின்பு
அடைவாகத் தாளகத்தின் மேலேகட்டு
நருதியாய்க் கதிரிலிட்டுக் காயப்போடு
நலமாகக் கல்லுப்புப் படிதான்ரெண்டு
வருதியாய் மேனியென்ற சாற்ருலாட்டி
வகையாகப் புடம்போடக் கட்டுந்தானே. (41)

கட்டியதோ ருப்பெடுத்து மூன்னுண்டைமேலே
கனிவாகக் கட்டியே காயவைத்து
நட்டுமே உமிதனிலே நடுவேவைத்து
நலமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
பட்டுமே குருவாகும் குருவிஞட்டு
பதியவே நபிமார்கள் காண்பாரப்பா
தட்டுமே குருவெடுத்து வைத்துக்கேளு
தரணிதனில் காகதுண்டி தன்னைவாங்கே. (42)

சுட்வன் செம்பு.

வாங்கியே ஒருசேரு நொருக்கிநீயும்
வளமாகத் துணிதனிலே யிருக்கிக்கட்டி
தாங்கியே புடம்போட்டுப் பிரித்துப்பாரு
தப்பாமற் கரியாகும் பதத்தில்வாங்கி
தேங்கியே திரியாதே பீங்கானிட்டுத்
திடமாகப் புகைநீரை அதிலேஊத்த
பாங்கியே பொங்கியது புகையும்பாரு
பாதைக்கு வெகுபோக்கு பாருள்ளோர்க்கே. (43)

பாரிலே வெங்காரங் கொஞ்சஞ்சேர்த்து
பதியவே குகையிலிட்டு உருக்குசெம்பு
ஊரியே வருகாது யிந்தச்செம்பு
உருதிபெறக் களங்குவந்த யிடங்களெல்லாம்
காரியமாய்ச் சேர்த்துநீ சொல்லக்கேளு
கணக்காக நாகத்தின் செம்புரெண்டு
வாரியே மூன்வங்கக் குருவும்ரெண்டு
வடிவாகச் சேர்த்துருக்கு வெட்டையாமே. (44)

வெட்டையா மதியெட்டில் ரெண்டுசேரு
விதமாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
கிட்டவே ஊதிப்பார் மாத்துயெட்டு
கிளறவே காலாகும் புடமிறங்கும்
தட்டையா யிவ்வேதை நிசமுமாகும்
சரியான மார்க்கமிது சார்புமெத்த
சிட்டரே யிதைவித்துச் செலவுசெய்து
சித்திபெற்று யேயிருந்து வாழலாமே. (45)

வாழவே செந்தூரம் பண்ணக்கேளு
வடிவான பித்தளையின் செம்புதன்னில்
தாழவே யிடைக்கிடைதான் தாக்கிநீறு
தடைபெறவே யெடுத்துப்பார் வெட்டையாகும்
ஏழைமதி போகாமல் தங்கத்தோடே
இடைக்கிடைதா னுருக்கியே தாக்கித்தீரு
பாழையாம் புகைநீரை விட்டரைத்துப்
பதிவாகப் பீங்கானி லிட்டுக்கேளே. (46)

இட்டுநீ வருத்துமே காசிமேரு
இதமாக அடைத்துமே சீலேசெய்து
பட்டுமே மூடியதை யடுப்பிலேற்றிப்
பக்குவமாய்ப் பன்னிரண்டு சாமந்தீதான்
நட்டுமே யெரியிட்டுக் கல்வமிட்டு
நலமாக மூன்புகைநீர் தன்னாலாட்டி
வட்டுமே காசியென்ற மேருக்கிட்டு
வகையாக மூன்போலே யெரித்திடாயே. (47)

எரித்துமே அடுப்பேற்றி யிறக்கிப்பின்பு
இதமாகயிப்படிக்குத் தரமுமஞ்சு
வருத்துமே யெரித்துயெடு முருக்கம்பூப்போல்
வடிவாக யிருந்திடுமே செந்தூரத்தை
நரித்துமே நவலோகந் தன்னிலூட்ட
நலயாகத் தனித்தனியே வேதையாகும்
பிரித்துமே மாத்தென்ன பதினாறுகும்
பெருமையாய்ப் பணவிடைதா னுண்டுதேரே. (48)

உண்டிடவே செந்தூரம் பணமவ்வீதம்
உருதிபெற அந்திசந்தி தேகந்தானும்
கண்டிடவே நோயெல்லாந் தவிடுபொடியாகும்
கண்காணத் தேகமது கற்றூணாகும்
பண்டிடவே பழங்கதைகள் பேசாமற்றான்
பதிவான வங்கச் செந்தூரம்பாரு
தின்றிடவே புளியோடு நல்லெண்ணெய்விட்டுத்
திடமாக வுண்டுபார் சித்தியாமே. (49)

சித்தியாம் தபிமார்க ளாடுமாட்டைச்
செகத்திலே உறுதியுள்ள வாதிக்குத்தான்
நத்தியே சொல்லிவிட்டே னுங்கண்டு
நலமாகப் பாகமதைப் பார்த்துத்தேறி
சத்தியமா யுங்களுக்குச் சொன்ன நீதி
தாட்டிகவான் கண்டுமே பிடிப்பானப்பா
புத்தியாய்க் கண்டுநீ பிடித்துக்கொள்ள
பேர்பெரிய குருவாகும் பேணிப்பாரே. (50)

பேணியே உலகத்தில் வாதிதானும்
பிரபலமாய் வாதத்தைக் கண்டேனென்று
ஊணியே சொல்லியுமே பணத்தைவாங்கி
யுத்தியோடு சரக்கதனை வாங்கிவந்து
கோணியே செய்திட்டுக் களங்குதன்னை
கூக்குரலாய்ச் செய்துமே செம்பிலிட்டு
நாணியே ஒன்றுமில்லை கெட்டுப்போச்சு
நலமாகத் திரிந்தலைந்து மாளுவானே. (51

மாளுவான் சிறிதுபேர் வாதிதானும்
வகையில்லாப் படிப்பதுதான் தெரியாதாலே
கூளுமே குடித்திட்டுப் பொய்கள்சொல்லிக்
குணமில்லா அபின்கஞ்சா கள்ளுதன்னை
பளுக்கவே குடித்துமே வாதஞ்செய்வோன்
பசப்பியே பணந்தன்னைப் பிடுங்கிக்கொண்டு
வாளுமே யென்றுசொல்லி யோடிப்போவான்
வகையறியான் மாடுதான் மேய்ப்பான்பாரே. (52)

மாடுதான் மேய்க்கின்ற வாதிதானும்
வகையில்லாக் கிடாமாடு வரிசைகாணூர்
காடுமே திரிந்தலைந்து மூலிதேடிக்
கருகியே யிலையைத்தான் பிடுங்கிவந்து
சாடுமே பாசாணந் தன்னிலிட்டுச்
சரியாச்சு யென்றுமே லோகந்தன்னில்
பாடுபட்டுக் கொடுத்துமே ஒன்றுமில்லை
பத்தியாய்ச் சொல்வார்கள் பாரிலோர்க்கே. (53)

பாரிலே வாதமில்லை யென்றுசொன்ன
பதிவான மூடருடன் சேர்கையாகா
ஊரிலே அவர்க்குநல்ல கெதியுமில்லை
உழன்றுமே ஏழ்நரகில் வீழ்வாரப்பா
சாரியாய் நீயுமே அவர்களோடே
சரியாகப் பேசாதே தரணியோர்க்கு
காரியமாய்ச் சொல்லிவிட்டேன் கண்டுகொள்ள
கணக்கறிந்த யாகோபு சொன்னவாரே. (54)

சொன்னதொரு வங்கத்தின் சுண்ணந்தன்னைச்
சொல்லிவிட்டே னதன்பெருமை துலக்கமாக
நன்னயமாய் வங்கத்தின் சுண்ணந்தன்னை
நலமாகக் கண்டாக்கால் நாட்டிலோர்க்கு
பின்னமில் லாமலே தங்கமாகும்
பிசகாது யென்வசனம் பொய்போகாது
தன்னகரில் சித்தனாய் வாழலாகும்
தடையற்ற நபிமார்க ளாடுமோட்டே. (55)

ஆட்டான கேள்வியினால் வாதஞ்சுட்டு
அறியாமற் பொய்யென்று லாரென்செய்வார்
நீட்டான குருவேணுஞ் சீடன்வேணும்
நிலையான சுண்ணமென்ற காண்டம்வேணும்
பாட்டான படிப்பைத்தா னறியவேணும்
பகலிரவாய்ச் சரக்குவகை காணவேணும்
மூட்டான உலகத்தில் திரியவேணும்
முற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. (56)

சீனச் சுண்ணம்.

சித்தியா மின்னமொரு சுண்ணமார்க்கம்
செப்புகிறேன் அண்டரண்டந் துளைத்து ஆட
முத்தியாய்ச் சீனமது பலமும்பத்து
முடிவான கரிநெருப்பி லூதி நீயும்
சத்தியமா யெடுத்துமே சொல்லக்கேளு
சரியாக இடைநேராய்த் துத்தந்தன்னை
நத்தியே சேர்த்துமெள்ளக் கல்வமிட்டு
நலமாக அரைக்கவே சொல்லக்கேளே. (57)

சொல்லக்கேள் யெருக்கம்பால் படியுமொன்றில்
சுயமாக அண்டவெண் கருவுமிட்டு
நல்லவே மூன்றுநாள் வைத்துப்பாரு
நலமான தண்ணீர்போல் தெளிந்துநிற்கும்
வல்லமையா யிந்தநீர் தன்னைவிட்டு
வளமாக அரைச்சாமம் வில்லைதட்டி
செல்லவே கதிரிலிட்டுக் காயப்போடு
சிறப்பாக ஊதிடவே சுண்ணமாமே. (58)

சுண்ணமாம் கடுஞ்சுண்ணந் துத்தச்சுண்ணம்
சுயம்பாகச் சரக்கெல்லாங் கரியிலாடும்
நன்னயமா யிச்சுண்ணம் நபிமார்க்கொப்பும்
நலமாகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
முன்னமே சுண்ணத்தில் வீரம்பாதி
முடிவாகச் சேர்த்தரைத்து முன்னீராலே
கன்னல்போற் கசடருந்தா ளகத்திலப்பி
கனிவாகக் காயவைத்துச் சொல்லக்கேளே. (59)

தாளகச் சுண்ணம்.

சொல்லவே குக்குடத்தில் நீறுமாகும்
சொல்லரிய தாளகத்தின் சுண்ணப்போக்கை
நல்லவே ஒருவருக்குஞ் சொல்லப்போகா
நலமான பாகமிது நாட்டிலோர்க்கு
வல்லமையாய்த் தாளகத்தின் சுண்ணம்நேரே
வடிவான நீரைவிட்டு அரைத்து நீயும்
செல்லவே துருசின்மே லப்பிப்போடு
செயமான கதிரில்வைத்துச் செப்பக்கேளே. (60)

துரிசுச் சுண்ணம்.

செப்பவே கோழியென்ற புடத்தைப்போட்டுச்
செயமாகப் பிரித்துப்பார் துருசுச்சுண்ணம்
நப்பவே யிருந்துவிடும் யெடுத்து நீயும்
நலமாக முப்பொழுதுந் தொழுதுநன்றாய்
தப்பியே போகாமற் சொல்லக்கேளு
தடையற்ற வீரமது தானுமிட்டு
அப்பியே யரைத்துவிடு சாமம்நாலு
அடைவாக முன்னீரால் அரைத்திடாயே. (61)

அரைத்துமே துருசின்மேற் கவசங்கட்டி
அடைவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டு
பரைத்துமே யெடுத்துப்பார் ரத்தம்போலாம்
பத்தியாய்த் துரிசியது தொந்தமாச்சு
கரைத்துமே யித்துருசு காலனெக்கும்
கணக்காகச் சகலமுந்தான் சுண்ணமாகும்
விரைத்துமே யிச்சுண்ணம் விராலிக்கிட்டு
விதமாகப் பிழிந்திடவே நீருமாமே. (62)

நீரான சாறுவராத் தழைகளெல்லாம்
நிலைத்துமே நீராகும் வேதைகோடி
ஆராகுந் தங்கமது கோடாகோடி
அனைத்துமே சரக்கையெல்லாங் கரியிலாடும்
வேராகும் வாதமென்ற சொல்லுக்கெல்லாம்
விதமாக ராஜாவாம் துருசுச்சுண்ணம்
பாராகும் படுமுன்னே வேதையாகும்
பாதைக்குத் துரிசதுவும் நேர்த்திதானே. (63

நேர்த்தியாஞ் சூதமது பலமும்பத்து
நேர்மையா யயக்கரண்டி தன்னிலிட்டு
சாத்தியே சுண்ணத்தி னுல்முறிந்த
சரியான நீரைவிட்டுக் கொதிக்கவைத்தால்
பாத்தியே சூதமது கட்டிப்போகும்
பதிவான யிருபத்தோர் மணிகள்செய்து
வாத்தியே தமரிட்டு நூலில்கோர்த்து
வடிவாகக் கைதனிலே வைத்துக்கொள்ளே. (64)

வைத்துமே பிசுமில்லா ரகுமானென்று
வகையான கலிமாவை ஓதித்திரு
மைத்துமே நாளொன்றுக் கொன்றுதானும்
நாடியே முப்போதுந் தொழுதுபோற்று
பைத்துமே யிப்படிக்குத் தொழுதாயானல்
பதிவாக நபிமார்போ லிருக்கலாகும்
கைத்துமே களங்கோடு செந்தூரங்கள்
கனிவான பொருளாகுங் கண்டுகொள்ளே. (65)

கண்டுகொள்ளு நினைத்ததெல்லாங் கையிற்கூடும்
கதியாகும் விதியாகுஞ் சித்தியாகும்
பண்டுமுன்னே யிருந்ததெல்லாம் பாகமாகும்
பத்தியதோர் காலனும் பாரிலோர்க்கு
தொண்டுபடுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
தொல்லுலகில் விந்திருகும் தொன்மைபாரு
உண்டுமே ஸ்திரீகளுந்தான் வசியமாகும்
உற்றுணர்ந்து பார்த்தாக்கால் சித்தியாமே. (66)

சித்தியாம் சூதத்தைக் கரியில்வைத்து
திட்டமா யுருக்கிப்பார் கரியிலாடும்
பத்தியாய் நாலுக்கு ஒன்றுதானும்
பதிவான தங்கமொன்று நாகமொன்று
நத்தியா யுருக்கிப்பார் களங்குமாகும்
நலமாகும் அதையுடைத்து நவலோகத்தில்
வெத்திபெற நூற்றுக்கு ஒன்றுயீய
விதமாகப் பத்தரையாம் விரும்பிப்பாரே. (67)

விரும்பியே செந்தூரம் பண்ணக்கேளு
வித்தகமாஞ் சூதமென்ற களங்கந்தன்னை
அரும்பியே கல்வமிட்டு உடைத்து நீயும்
அடைவாகக் கெந்தியிட்டுத் தாரமிட்டு
வரும்பியே புகைநீரா லரைத்துக்கொண்டு
வாகாக உமிநெருப்பில் வருத்து நீயும்
தரும்பியே காசியென்ற மேருக்கேற்றி
தப்பாம லெரியிடவே தன்மையாமே. (68)

தன்மையாய்ப் பன்னிரெண்டு சாமந்தானும்
தாக்கிடவே யெரித்துநீ கமலமாக
உண்மைகா டாக்கினியா யெரித்துநீயும்
உற்றுமே நபிமாரைத் தொழுதுபோற்றி
வண்மையாய் அல்லாவை மனதிலெண்ணி
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாக
துண்மைபெறச் சொல்லியே நவலோகத்திற்
தூக்கிமெள்ள நூற்றுக்கு ஒன்றுதாக்கே. (69)

ஒன்றுமே கொடுத்துநீ உருக்கிப்பாரு
உற்றுயெடு பத்தரைதா னிக்கொக்கும்
கன்றுமே போட்டதுபோற் சித்தியாகும்
கனிவான பொருளாகுங் கணக்குக்கேளு
நன்றுமே நாவினாற் சொல்லப்போகா
நானிலத்தில் நபிமார்க ளாடுமொட்டு
அன்றுமே பணவிடைதான் பாலிலுண்ணு
அருணனிற மாகுமிது அடைவுமாமே. (70)

அடவான மண்டலந்தா னுண்டுதேரு
அதிகபெல னதுமே தேகந்தானும்
முடவான தாதுவெல்லாம் நிமிர்ந்துபோகும்
மூத்தியது வுண்டாகும் மோகமாகும்
நடவாகு முப்போடு எண்ணெய்விட்டு
நாடியே பத்தியமா யுண்டுதேரு
குடமாகும் பணமதுவும் அதிகமாகும்
குடிலமரும் யோகமாம் குணமுமாமே, (71)

குணமான வாதத்தில் குற்றந்தானும்
        கொடியதொரு வேகமாங் குற்றமில்லை
மணமாகும் வேதையாம் பொன்னுமுண்டு
        மயங்காதே துருசதுவை நீற்றினுக்கால்
உணவாகுஞ் சகலமுந்தான் சித்தியாகும்
        ஓகோகோ உறுதியுள்ள செந்தூரந்தான்
பணமாகும் பாதைக்கும் பெலக்கும்பாரு
        பத்தியுள்ள நபிமார்களாடுமாட்டே. (72)

ஆட்டான நபிமார்களாடுமாட்டை
        அறிவுள்ளோ ரறிவார்கள் மூடர்தானும்
பாட்டான படிப்புகளைப் படித்துக்கொண்டு
        பதிவாக உள்ளன்பில் வேறேயொன்று
நீட்டாகச் சொல்லுவார் வாதங்காணார்
        நிலையான கைபாக வரிசையில்லார்
பூட்டாகச் சொல்லுவார்க் கொன்றுமில்லை
        புகலரிய நால்வேதம் பிரித்துப்பாரே. (73)

பிரித்துமே ஒவ்வொன்றாய்ச் சரக்கைக்கண்டு
        போக்கோடே செய்தாக்கால் பலனுமாகும்
விரித்துமே நூல்கண்டு வினையங்கண்டு
        விதமாகச் செய்திடவே சித்தியாகும்
பரித்தளவி வளைக்குள்ளே யிருந்தாப்போல
        பதிவாகச் சொன்னதினாற் பலனுமில்லை
சிரித்தாக்கால் ஒன்றுமில்லை சீருமில்லை
        செப்பமா யாராய்ந்தால் செயமுமாமே. (74)

செயமாகுந் துருசினுட சுண்ணமல்லால்
        செப்பமாய் வாதங்கள் மிகவுமில்லை
நயமாக வங்கமில்லாச் செந்தூரமெல்லாம்
        நாடியே தூரயெறி நன்மையாகா
பயமாகக் கைபாக மில்லாவேலை
        பதியவே தூரயெறி பாரிலோர்க்கு
மயமாக நூலில்லா வாதமெல்லாம்
        வகையில்லை தொகையில்லை வழக்கமாமே. (75)

நாகச் சேந்தூரம்.

வழக்காகத் தங்கமில்லா வாதமெல்லாம்
வடிவாகத் தூரயெறி வகையுமில்லை
தழக்காக மதியில்லாத் தங்கமெல்லாம்
தடையறவே வாசல்தனில் தூரத்தள்ளு
உழக்கமாய் மாடில்லாக் கலப்பையெல்லாம்
உருதியில்லை வுழுகாது உண்மைபாரு
துழக்கமா யறமில்லா வேதையெல்லாம்
துப்புரவாய்த் தள்ளிவிடு துயர்ந்துபாரே. (76)

துயர்ந்துபா ரின்னுமொரு நாகந்தன்னைத்
துப்புரவாய்ச் செந்தூரஞ் செய்யக்கேளு
நைந்துமே நாகத்தி னோட்டம்போல
நாட்டிலே கிடையாது நாடிப்பாரு
பைந்துபார் நவலோகம் பழுக்குமப்பா
பதிவான நாகமென்ற ராசாதானும்
வைந்துமே புகையெல்லாம் வேதையாகும்
வடிவான நாகந்தா னுடுமாட்டே. (77)

ஆட்டான நாகமது பலமுமொன்று
அடைவான யிலுப்பையெண்ணெய் தன்னிலேதான்
வாட்டமா யேழுதர முருக்கிச்சாய்க்க
வகையான கசடகலும் வண்மைபாரு
தேட்டாக நாகத்தை உருக்கியெட்டு
திடமான சூதமது ரெண்டுவிட்டு
பாட்டாகக் கல்வமிட்டு உடைத்து நீயும்
பதிவாகக் கற்றாழைப் பாலாலாட்டே. (78)

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
பூட்டியே குக்குடமாம் புடமுமிட்டுப்
போக்கோடே யெடுத்துமெல்லச் சொல்லக்கேளு
நாட்டியே கசடறும் தாளகத்தில்
நலமாகக் கட்டியே கதிரில்வைத்து
கூட்டியே சேவலென்ற புடத்தைப்போடு
குணமாக யெடுத்துமே சொல்லக்கேளே. (79)

சொல்லவே கல்வமிட்டுப் புகைநீராட்டிச்
சுயமாகத் தாளகத்தின் மேலேகட்டி
நல்லவே கதிரில்வைத்துக் காயப்போடு
நலமாக பயபக்தி யுடனேதானும்
வல்லமையா யிப்படிநால் தாமும்போட்டு
வகையாக யெடுத்துப்பார் களங்குமாகும்
வெல்லவே நபிமாரைத் தொழுதுபோற்றி
விதமாகச் சொல்லுகிறேன் விருப்பிக்கேளே. (80)

விரும்பியே செம்புதனில் யெட்டிலொன்று
விதமாகக் கொடுத்துருக்கு அதைஉடைத்து
நரும்பியே வெள்ளியெட்டில் ரெண்டுயிட்டு
நலமாகத் தங்கமது ஒன்றுசேர்த்து
தரும்பியே ஊதியெடு தங்கமாகும்
தாக்கான தங்கத்தை வித்துநீயும்
வரும்பியே உண்டுடுத்திக் கந்திரிக்கு
வகையாகக் கொடுத்துமே தொழுதிடாயே. (81)

தொழுதுமே நாகத்தி னுட்டைப்போலே
தொல்லுலகிற் கிடையாது துயர்ந்துபாரு
அழுதுபார் வாதந்தான் வந்தபோது
அடைவாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
உழுதுமே பயிரதுவை யிட்டுப்பின்பு
உண்மையா யறுப்புகள்தா னறுத்துநீயும்
பழுத்துமே உண்டபின்பு வாதமார்க்கம்
பதையாமற் செய்திடவே பலனுமாமே. (82)

பலனாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாதையிது லெகுவாகும் பலிதமாகும்
பெலனாகக் கெந்தகமும் துருசுசேர்ந்து
பிரியாமற் சத்தாகி யிருந்ததென்றால்
அலனாகச் சத்தைத்தான் கல்வத்திட்டு
அடைவான காரீயம் குமரிநீரால்
வலுவாக அரைத்துமே புடமூன்றிட்டு
வண்மையா யெடுத்திடவே மஞ்சளாமே. (83)

மஞ்சளாம் வங்கமது சத்துக்குத்தான்
மார்க்கமாய் நாலிலொன்று சேர்த்தரைத்து
தஞ்சமாய்ப் புடம்போட்டு உருக்கிப்பாரு
தடையறவே கரிபோலே யுருகிநிற்கும்
பஞ்சமது தீர்ந்துவிடும் வாதிக்குத்தான்
பதிவாகப் பஞ்சமித்திரந் தன்னிற்சாய்த்து
துஞ்சபர யெடுத்துமே வைத்துக்கொண்டு
தொடுசறவே பாகமாய்ச் சொல்லக்கேளே. (84)

சொல்லுவேன் சத்திலுள்ள செம்புதன்னைத்
துடியான யீயமது பிடித்திழுத்து
மல்லாக யிருந்திடுமே பின்புநீயும்
மார்க்கமாய் வங்கவெட்டை போலேயாகும்
கல்லவே வெள்ளிதனில் நாலிரண்டு
கணக்காகச் சேர்த்துமே தங்கமொன்று
நல்லாகச் சேர்த்தூத மாதமேழு
நானறிந்தேன் யாகோபு நலஞ்சொன்னேனே. (85)

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச்
சொற்பெரிய வங்கவெட்டை பலமூம்நாலு
கன்னல்போல் தங்கமது பலமுமொன்று
காரியமாய் நாகமது பலமுமொன்று
நன்னயமா யுருக்கியெடு புட்டுப்போலே
நலமாக யிருக்குமது கல்வத்திட்டு
இந்நிலத்திற் கெந்தகமுஞ் சூதஞ்சேர்த்து
இதமாகப் புகைநீரா லரைத்திடாயே, (86)

அரைத்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடமிட்டு எடுத்துப்பாரு
தரைத்துமே கரிபோலே தூளாம்பாரு
தனையெடுத்துப் பலம்நாலு கல்வத்திட்டு
பரைத்துமே வங்கச்செந் தூரமொன்று
பதியவே கல்வத்தி லிட்டுநீயும்
வரைத்துமே குமரியன்னந் தன்னாலாட்டி
வகையாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (87)

கதிர்தன்னிற் காயவைத்துப் புடமுமிட்டுக்
கனிவாக வெடுத்துப்பார் செந்தூரமாகும்
பதிவாக நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பண்டான செந்தூரம் நவலோகத்தில்
கெதியாக ஒன்றுகொடு மாத்துப்பத்துக்
கிருபையா யிருந்திடுங்காண் நல்லவித்தை
சதியாகச் செய்யாதே பாகமாகச்
சாஸ்திரத்தை யாராய்ந்தால் தன்மையாமே. (88)

தன்மையாய்ச் சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு
தடையறவே நபிமாரைத் தொழுதுபோற்று
உண்மையா யறிவாகக் கண்டுகொண்டு
ஒருவேளை செய்துமே சீவனங்கள்
வண்மையாய்ச் செய்துமே உண்டுதேரு
வகையறிய வேணுமென்று லின்னூல்தன்னை
கண்மையாய்ப் பார்த்துவிடு சகலசித்தும்
கண்டுநீ பிடிக்கலாங் கருதுவாயே. (89)

கருதவே தளகர்த்தன் வங்கராசன்
கனகமது தந்திடுவான் கண்டுகொள்ளு
பருகவே வங்கமில்லாக் களங்கமெல்லாம்
பதிவாக ஒன்றுக்கு மாகாதுதள்ளு
நருகவே தங்கமில்லாச் செந்தூரந்தான்
நலமில்லை முறைகடக்கத் தள்ளிப்போடு
உருகவே சத்துத்தா னில்லாவிட்டால்
உறுதியில்லை செம்புதான் களிம்பறுதே. (90)

களிம்பான செம்பைத்தான் மட்டஞ்சேர்த்தால்
கதிபெருகப் புடமிறங்காக் கனகமில்லை
வளிம்பான பொன்னில்லை சேதம்ரெம்ப
வடிவான வருத்தங்கள் மிகவுமுண்டு
உளிம்பாகப் பச்சைமண் சுட்டால்நன்று
உறுதியொக்கும் செப்புதா னுறுதியாகும்
அளிம்பாகச் சொல்லாமல் நூலைத்தானும்
அறிந்துமே உழைத்தாக்கா லாபமாமே. (91)

நாகச்செம்பு.

லாபமா மின்னமொரு நாகச்செம்பை
நலமாகச் சொல்லுகிறோம் நாட்டுள்ளோர்க்கு
காபமாய்த் திரியாதே நாகந்தானும்
கனமாகப் பலம்நாலு தாக்கிநீயும்
தாபமா யிலுப்பெண்ணெய் தனிலுருக்கித்
தாட்டிகமா யிருபத்து ஒன்றுதானும்
ஆபலாய்ச் சாய்த்துமே உருக்கிநீயும்
அடைவாகச் சூதத்தைப் பாதிசேரே. (92)

பாதிதா னுருக்குமுகந் தனிலேவூட்டு
பதிவாகக் கல்வமிட்டு உடைத்துக்கொண்டு
சாதியாய் வீரமது பலமுங்கால்தான்
சரியாகச் சேர்த்துமே கல்வத்திட்டு
போதியாய்ப் புகைநீரி லரைத்துநீயும்
போக்கோடே யிருசாமம் வில்லைதட்டி
நாதியாய்க் கதிரில்வைத்துச் சீலைசெய்து
நலமாகக் குக்குடத்திற் போட்டுவாங்கே. (93)

வாங்கியே பார்த்தாக்காற் சிவந்துநிற்கும்
வளமாகத் தாளகமும் பலமும்பத்து
தேங்கியே கற்சுண்ணங் கீழ்மேலிட்டுத்
திடமாகப் பாணிவிட்டு நீற்றிநீயும்
பாங்கியே கசடகற்றி எடுத்துமெள்ளப்
பதிவாகப் பலம்நாலு கல்வத்திட்டு
நீங்கியே நாகமஞ்சள் பலமும்நாலு
நேராக யிதுரெண்டுங் கல்வத்திட்டே. (94)

இட்டுமே புகைநீரரற் சாமமாட்டி
இதமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
நட்டுமே காரியம் பலமும்நாலு
நலமாகக் கரண்டியிட்டு உருக்கிநீயும்
பட்டுமே வெடியுப்புப் பாதியிட்டுப்
பதிவாகக் கிண்டிடவே மஞ்சளாகும்
கட்டுமே மஞ்சளது பலமும்நாலு
காரியமாய்க் கல்வமிட்டுக் கணக்குக்கேளே. (95)

கணைக்காகக் கற்றாழம் பாலிலாட்டிக்
கதிபெருக மூன்றுபுட மீட்டுநீயும்
பிணக்காகக் கன்னிப்பால் தன்னுலாட்டிப்
பிரியமாய் மூன்றுநடை தனிலேகட்டி
துணக்கமாய்க் கதிரில்வைத்துப் புடமுமிட்டுத்
தூக்கியெடு நபிமாரைத் தொழுதுபோற்றி
குணக்கில்லாக் குருவாகும் செம்புநூறில்
கொடுத்துருக்க ஒன்றாகும் கூர்ந்துபாரே. (96)

கூர்ந்துபார் செம்பதுவுந் தங்கமாகும்
கூகூகூவாதமது கொள்ளையாகும்
தேர்ந்துபா ருப்புக்குங் காவிக்கப்பா
திடமாக நின்றிடுங்காண் செல்வமாகும்
வார்ந்துமே திரியாதேபுத்திகேளு
வகையாக வைத்துநீ செலவுசெய்து
பார்த்துமே கந்திரிகள் மிகவும்பண்ணு
பதிவாக நின்றிடவே பலனுமாமே. (97)

துருசுச் செம்பு.

பலனாகச் சொல்லுகிறேன் துருசுச்செப்பு
பக்தியா யெடுத்திடவே பலமதாக
நலனாகத் துருசதுவும் பலமும்நாலு
நாடியே கட்டியா யெடுத்துக்கொண்டு
பிலனாக முடியதுவும் பலமுமெட்டு
பிசகாமல் அரிசின்மேற் சுற்றிநீயும்
கலனாகக் கெந்தியது பலமுமுக்கால்
கனிந்துமே சூடனரை வீரங்காலாம். (98)

காலாக மிதுவெல்லாங் கல்வத்திட்டுக்
கதிபெறவே கற்றாழை நீரிலாட்டி
சாலாக அதின்பேரி லரப்பொடியைத்தாறும்
சாதகமா யரைத்துமெள ளப் பழச்சாற்றாலே
ஏலாக அரைத்துமே கவசங்கட்டி
இதமாக மண்கவசம் மேலேகட்டி
பாலாகக் கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
பதிவாகப் பெரியபுடம் போட்டிடாயே. (99)

போட்டுமே மேற்கவசந் தள்ளிப்போட்டு
போக்கோடே மருந்தெல்லா மெடுத்துக்கொண்டு
காட்டுமே வைத்துநீ மதியிலெட்டுக்
கனிவாக ரெண்டுகொடுத் துருக்கிப்பாரு
தீட்டுமே தங்கமது ஒன்றுசேர்த்துத்
திறமாக ஊதியெடு மாத்துயெட்டு
நாட்டுமே விற்றிடுநீ செலவுசெய்து
நலமாக உண்டிட்டுப் பின்புகேளே. (100)

கேளுமே யிதுலெகுவு முன்னேசெய்து
கிருபைவைத்துப் பின்புதான் வங்கந்தன்னை
தாளுமே உழைத்துச்செந் தூரம்செய்து
நலமாக ரவிதனிலே யிடையேதாக்கு
பாளுமே போகாது புடமிறங்கும்
பத்தியொடு விற்றுமே செலவுசெய்து
ஆளுமே நபிமாரை வணங்கச்சொன்னேன்
சுருதியுற்ற யாகோபு சொன்னவாரே. (101)

வாரேது வென்றக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்க் கைபாக வரிசைதன்னை
பாரேது பார்த்துநீ பாகமாகப்
பத்தியே செய்தாக்கால் பலனுமாகும்
தூரேதுஞ் சொல்லாதே துணையாய்ப்பற்றித்
துடியாக ரசவாதத் தொழிலைக்கண்டு
கூரேது கூக்குரலாய்ச் செய்யவேண்டாம்
குடிகேடு வந்துவிடும் குணமுமாமே. (102)

குணமாகப் பலபேர்க ளிடத்தில்வாதம்
கூக்குரலாய்ச் சொன்னக்காற் குடிகெடுக்கும்
பணம்போகு மாக்கினைதான் மிகவுண்டாகும்
பதிவான தலைபோகும் பாரிலேதான்
உணவாக உனைநம்பார் உலுத்தமாடு
உற்றுமே பொருளறியார் ஒழுங்குமில்லை
பிணம்போலே யிருந்துமே வேலைபாரு
புத்ததனில் வைத்திருக்கும் பிரிதிதானே. (103)

பிரிதியாய் நாவடக்கிப் பேசிநீயும்
போக்கோடே கையடக்கம் பொருமைசாந்தம்
அரிதியாய் அடங்காம லிருந்தால் நீயும்
ஆண்மைவந்தால் தலைபோகு மறிவுள்ளோர்க்கு
கருதியே கருவுதனை யறியச்சொன்னேன்
கணக்காகச் சுண்ணம்நூற் றைப்பத்தைந்தும்
வருதியாய்ப் பார்த்துமே வணக்கம் பண்ணி
வழக்கமாய்ச் செய்திடவே வடிவுமாமே. (104)

வடிவாகப் பஞ்சபூ தத்தைக்கண்டு
வலுமையாய்க் கைபாக வடிவுகண்டு
துடியான பொருள்கண்டு பேச்சுங்கண்டு
தொல்லுலகில் சரக்குகளைச் சோதித்தேறு
முடிவாகச் சகலமுந்தான் சித்தியாகும்
முனைகண்டு உறுதிபெற்ற மூலங்கண்டு
இடிவான சொல்லைத்தான் பிரித்துப்பார்த்து
இதமாகச் செய்தவனே சித்தனுமே. (105)

தாளகக்கட்டு

சித்தான தாளகத்தின் கட்டுக்கேளு
சீர்பெறவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
முத்தான சுண்ணம்பு சட்டியிட்டு
மூவுலகு மெய்த்திடவே பாணிவிட்டு
நத்தான நெரியிட்டுக் கசடகற்றி
நலமாக எடுத்துவைத்து நாட்டக்கேளு
பத்தான அப்பிரேகம் பலமும்பத்து
பதிவான வீரமது பலமுங்காலே. (106)

காலாக நிருத்துமே கல்வத்திட்டுக்
கருதியே பாணிவிட்டு அரைநால்சாமம்
மேலாக வெண்ணெய்போற் றிரளும்பாரு
விதமாக வளித்துவில்லை கதிரில்வைத்து
சேலாகக் காடையென்ற புடமுமிட்டுச்
சிறப்பாக யெடுத்துப்பார் வெள்ளையாகும்
தாலாகக் கன்னியர்பால் விட்டரைத்துத்
தாளகத்தின் மேலங்கி கட்டிக்கொள்ளே. (107)

கட்டியே ஒன்றுக்கு நாலதாகக்
கனிவாக உருண்டையாய்க் கட்டி நீயும்
பட்டியே கதிரில்வைத்துக் கிளிஞ்சிச்சுண்ணம்
பத்தியெடு சட்டிதனிற் பாதியிட்டு
புட்டியே உண்டைதனை மேலேவைத்துப்
புகலரிது அதின்பேரிற் சுண்ணம்பிட்டு
நட்டியே அழுக்கியே அடுப்பிலேற்றி (108)
நலமாகக் கமலம்போ லெரித்திடாயே.

எரித்துமே பிரித்துயெடு உண்டைதானும்
இதமாகக் கவசத்தைப் பிரித்துப்பாரு
வரித்துமே தாளகந்தா னுருகிநிற்கும்
வகையாகச் சிவந்தநிற மாகக்காணும்
கரித்துமே காரீயம் பலமுப்பத்து
கனிவாகக் கல்வத்தி லிட்டு நீயும்
சரித்துமே தகடதனைப் பிச்சுப்போட்டு (109)
சாரித்துக் கற்றாழை நீரிலாட்டே.

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடங்கொஞ்சம் போட்டெடுத்து
நீட்டியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
நேரான மஞ்சள்தனைக் கல்வத்திட்டு
தாட்டிகமாய் முன்னீரா லரைத்து நீயும்
தப்பாமற் புடம்போட்டு முன்போற்றானும்
கூட்டியே சிவந்துநிற்கும் பின்புநீயும் (110)
குழறவே புடம்போடக் குணமதாமே.

குணமாக இப்படிக்குப் புடமூன்று
குடிகேடு செய்யாமற் போட்டுப்பாரு
மணமாகச் செந்தூர மாகும்பாரு
மயங்காமற் கல்வமிட்டுப் புகைநீராட்டி
பணமாக முன்னெடுத்த தாரமேலே
பதியவிதைக் கட்டி நீ கணக்குக்கேளு
உணவாகத் தாரமொன்று வங்கம்நாலு (111)
உற்றுமே கட்டிக்கதிர் காயவையே.

காயவைத்துக் கிளிஞ்சியென்ற சுண்ணந்தானும்
கனிவாகப் படிரெண்டு சட்டியிட்டு
மாயவைத்து அமுக்கியே யதின்பேற்கேளு
வகையாக வங்கவுண்டை அதின்மேலிட்டு
நாயன்மார் சொற்படிக்குக் கிளிஞ்சிச்சுண்ணம்
நன்றாக அமுக்கியே மூடி நீயும்
பாயவே அடுப்புதனி லேற்றிக்கேளு
பதிவாகக் காடாக்கினி யெரித்திடாயே. (112)

எரித்துயெடு நால்சாமம் பிரித்துமெள்ள
இதமாக உண்டையெல்லாங் கல்வமிட்டு
வரித்துயெடு புகைநீரால் சாமமாட்டி
வகையாகத் தாளகத்தின் மேலேகட்டு
நரித்துமே கதிரில்வைத்துச் சட்டிதன்னில்
நலமாக நீரிட்டு உண்டைவைத்து
பரித்துமே முன்போலே சுண்ணமிட்டுப்
பதியவெரி முன்சாமம் பண்புதானே. (113)

தானேதா னிப்படிக்குத் தரமும்நாலு
தடையறவே யெரித்துயெடு குருவுமாகும்
மானேதான் நபிமாரைத் தொழுதுபோற்றி
வையகத்தி லாண்டவரை மூன்றுகாலம்
பானேநீ தொழுதிட்டுச் செம்புருக்கிப்
பதிவாகக் குருவதனை யிடையேயீய
கோனருளாற் செம்பதுவும் நொருங்கிப்போகும்
குணமாகும் யாகோபு கூறினாரே. (114)

கூறினேன் வெள்ளிதா னுலுருக்கிக்
குணமாக நேரேகால் கொடுத்துப்பாரு
வாரியே யெடுத்துப்பார் வெட்டையாகும்
வடிவாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
நாரியே ஊதியெடு பொன்போலாகும்
நாதாக்கள் நபிமார்க ளாடுமாட்டு
பாரிலே சொல்லாதே தகடுதட்டிப்
பண்பாகப் புடமாகும் பலமும்நாலே, (115)

பலம்நாலு உப்பதுவும் பலமூன்று
பத்தியாய் மத்தித்துத் தகடுள் வைத்து
பிலமாகப் புடம்போட ரெண்டிடைதானிற்கும்
பேசாதே யெடுத்துவிற்றுச் செலவுசெய்து
அலனுகக் கந்திரிகள் சோறுமாக்கி
அடைவாகக் கொடுத்துமே பின்பு நீயும்
வலனுகப் பள்ளிதனில் தொழுதுபோற்று
வையகத்தில் யாகோபு வரிசைதானே. (116)

வரிசைதா னிவ்வேதை நிசமதாகும்
மயங்கிநீ திரியாதே அல்லாமேலே
துரிசையா யாணையாம் பாகந்தப்பில்
துணையான நபிமார்மே லாணையாகும்
பரிசையா யிப்பாகந் தப்பிற்றுனல்
பதிவான பொன்பேரி லாணையாகும்
உரிசைதரும் நாவினுற் சொன்னசொல்லு
உற்றுணர்ந்து யாகோபு சொன்னவாரே. (117)

சொன்னதொரு ஆணையிட்ட பொருளைக்கேளு
சொற்பெரிய முன்னுல்நான் ராமதேவர்
நன்னயமாய் மக்காவின் தேசம்புக்கி
நலமாக வேதத்தில் நுழைந்தபோது
கன்னல்போற் சித்தரெல்லாம் பரியாசந்தான்
கண்டுமே சொன்னுர்கள் காதலாலே
சின்னபின்ன மாகவேதான் வாதப்போக்கைச்
செப்பினுர் சித்தரெல்லா மதற்குத்தானே. (118)

தானேதான் வேதத்தின் மார்க்கத்தாலே
தடையறவே கைபாக வரிசைகண்டு
ஊனேதான் சொல்லிவிட்டே னென்னைப்போலே
உற்றுணர்ந்த ஏழையாம் வாதிமார்கள்
காணேதான் பிழைக்கவே சொல்லிப்போட்டேன்
கருணைரச வாதத்தைக் கண்டோர்தெய்வம்
மானேதான் காணுத பேர்கள்தானும்
மதித்துமே யறியார்கள் மார்க்கமாமே. (119)

மார்க்கமாய் மடையருக்குச் சொல்லவேண்டாம்
மதிகெட்டுத் திரியாதே சுண்ணக்காண்டம்
ஏர்க்கவே அறுநூறும் பார்த்துப்பின்பு
இதமாயிம் முன்னூறு தன்னைப்பார்த்து
பார்க்குளிதைக் குறுக்கிநூற் றைம்பத்தைந்து
பதிவாகப் பார்த்திட்டுப் பலனைச்சோதி
கோர்க்கவே நிசமாகும் வாதந்தானும்
கொள்ளையோ கொள்ளையிதைக் கூறினேனே. ()

அரிப்புக்காரன் செய்கை.

கூறினேன் குணமாக அரிப்புக்காரன்
குணத்தையுந் தானறியக் குறிப்பைக்கேளு
தேறியே களவுசெய்யுந் தட்டாளிட்ட
திடமாக ஊதுகின்ற நிகடைதன்னை
மாறியே மனம்பிடித்துச் சேர்க்குந்தானே
மயமாகக் காற்பணமுந் தாரேனென்று
ஊறியே மனதுதனி லுரைத்துப்பின்பு
உறவாக நிகடைதனை வாங்குவாங்கே. (121)

வாங்கியே நிகடையைத்தான் வாங்கிநீயும்
வளமாகச் சென்றுமே மனையிலேகி
தாங்கியே நிகடைதனைக் கல்வத்திட்டுத்
தாட்டிகமாய் மாவாக்கிப் பின்புகேளு
பாங்கியே காரீயம் சட்டியிட்டுப்
பதிவாகக் கருங்காலித் தடியைக்கொண்டு
ஏங்கியே தடியாலே கடைந்துநைய
இதமாக மாவாக்கிப் பின்புகேளே. (122)

கேளுமே முன்னுரைத்த நிகடையொன்று
கெடியாகக் காரீய மாவுநாலு
பாளுமே போகாமற் சேர்த்தரைத்துப்
பதிவாகச் சரஉலையில் மொத்தையிட்டு
கூளுமே நாளம்வைத்து ஊதும்போது
குணமாகச் செத்தசெம்பை யீயந்தானும்
நாளுமே பிடித்திழுத்து உருக்கிக்கீழே
நலமாகக் கிட்டம்போ லிறங்குந்தானே. (123)

இறங்குகின்ற கிட்டமதைத் தூக்கிப்பின்பு
இன்பமா யரைத்துண்டை பண்ணிநீயும்
துறங்கவே மேலூத்தா யூதும்போது
துடியாக யீயமது உருகியோடும்
நிறங்குன்று மேற்றானும் வடிந்துநல்ல
நிலையான பன்னடையின் செம்புவாச்சு
திறமாக விச்செம்பு செய்துபாரு
திட்டமா யிதுபோலே களங்குதானே. (124)

களங்கமது பண்ணியே யெடுத்துருக்கு
கனிவாகக் காரமிட்டு உருக்கியாட்டி
உளங்குளிரக் கல்வமிட்டு யீயந்தன்னை
உணர்வாகத் தகடடித்துக் கன்னிநீரால்
பளங்கதைகள் பேசாம லரைத்துவில்லை
பதியவே சேவலென்ற புடமுமிட்டு
தளமாக வெடுத்துப்பார் சிவந்துநிற்குந்
தனையெடுத்துக் கல்வமிட்டுப் பின்புகேளே. (125)

பின்புதான் முன்னரைத்த நீராலாட்டிப்
பேசரிய புடம்போட மஞ்சளாகும்
அன்பாக யிப்படிக்குப் புடமுமஞ்சு
அடைவாகப் போட்டுமே எடுத்துநீயும்
தென்பாக முன்சத்துப் பலமுநாலு
திடமான யீயச்செந் தூரமெட்டு
தன்பார்வை யாகவே ரெண்டுஞ்சேர்த்துத்
தடையறவே கன்னியா லரைத்திடாயே. (126)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
பரைத்துமே திரியாதே குகையிலிட்டுப்
பதிவாக உருக்கிடவே வெள்ளையாகும்
கரைத்துமே பஞ்சமித் திரத்திற்சாய்த்துக்
கனிவாக மதிதனிலே யெட்டுரெண்டு
தரைத்துமே தங்கமது சேர்த்துருக்கித்
தடையறவே ஊதியெடு தங்கமாமே. (127)

தங்கமாம் புடமிறங்குந் தங்கந்தன்னை
தடையறவே விற்றுமே செலவுசெய்து
உங்கள்குல மீடேறத் தொழுதுபோற்று
உறுதிபெறக் கந்திரிகள் மிகவும்பண்ணி
துங்கமயச் சோருக்கிக் கொடுத்துப்பின்பு
துடியாகப் பிஸ்மில்லா ரகுமானென்று
பங்கயத்தில் தொட்டுமே நினைவுபூண்டு
பத்தியாய்ச் செய்திடவே முத்தியாமே. (128)

முத்தியாய்த் தானரிப்புக் காரன்போலே
முடிவாகப் பாகமாய்க் கூட்டிவந்து
நத்தியே களங்குவைத்துச் சத்துப்பண்ணி
நலமாக வங்கச்செந் தூரப்பண்ணி
சித்திபெற யிதையெல்லாம் நீநிறுத்து
சிதறும லரைத்துமே சொல்லக்கேளு
புத்திபெற அவனிடத்திற் கொடுத்து நீயும்
புகழாகச் செம்பெடுத்துச் சொல்லலாமே. (129)

சொல்லுவாய் கைபாகம் கற்றுக்கொண்டு
சுகமாக அவ்வனைத்தான் தள்ளிப்போடு
மல்லுவாய் பின்புநீ பாகமாக
மதிமயங்கிப் போகாமற் பாகம்பண்ணி
நல்லுவாய் செம்பெடுத்து மட்டஞ்சேர்த்து
நலமாக விற்றுயிதைச் சிலவுசெய்து
கல்லுவாய் செம்பைத்தான் செந்தூரித்துக்
கருத்தாக உண்டுடுத்தித் திரிந்திடாயே. (130)

திரிந்திடவே யிப்படிக்குப் பாகமாகச்
செயமாகச் செய்திட்டால் திட்டமாகும்
பிரிந்துமே போகாமல் நினைவிற்பூண்டு
பிசகாமல் செயமாகக் கூட்டிவாழு
வரிந்துமே வாதங்கை பொத்திக்கட்டி
வடிவாக யேவலது மருவுங்காலை
சரிந்துமே பாகமது தப்பிற்றுனாற்
சரியல்ல யெல்லாமும் பொய்யுமாமே. (131)

பொய்யாகப் போகாமற் களங்குதன்னைப்
பிரித்துமே ஆட்டியே செய்துபாரு
வையகத்தி லுனக்கெதிரி சீமானுண்டோ
வடிவான சகலசித்து மாடலாகும்
மெய்பாக இக்காண்டந் தன்னிற்றானும்
மேன்மைபெறச் சகலசித்துஞ் சொல்லிவிட்டேன்
நய்யாக மாகவே தடையில்லாமல்
நாடியே யெல்லாமுஞ் சித்தியாமே. (132)

சித்தியது வாகவென்றால் முன்னே நீயும்
செயமாகக் களங்கம்வைத்துச் சீவனங்கள்
பத்தியாய்ப் பண்ணியே பின்பு நீயும்
பதிவான செந்தூரம் பண்ணியுண்ண
முத்திபெற முன்காண்டச் சுண்ணந்தன்னில்
மூவுலக மெச்சவே சொல்லிப்போட்டேன்
நத்தியே பார்த்து நீ கண்டுகொள்ளு
நன்றாக யாகோபு நலஞ்சொன்னேனே. (133)

நலமாக ஒருகளங்கிற் சொன்னமார்க்கம்
நாடியே யெல்லாமும் நடத்தையாக
புலமாகச் செய்துமே பாகமாகப்
புத்தியாய்க் கண்டுமே பிடித்துக்கொள்ளு
அலமாக அலையாதே நூலைப்பார்த்து
ஆடினார் சகலசித்தும் ஆடலாகும்
குலந்தனக்குக் கோடாலி வங்கந்தன்னைக்
கூட்டியெடு களங்கதுவுங் குருவுமாமே. (134)

குருவாக ஒருசத்திற் சொன்னமார்க்கம்
கோடான கோடிக்குங் குறித்துக்கொள்ளு
பருவமாய் வேதையென்றால் வயதுகொஞ்சம்
பாதையில் வெகுபோக்குப் பற்றிப்பாரு
துருவமாய் நூலில்லா வாதமில்லை
துடியான வாயில்லாப் பானையில்லை
கெருவமாய்ப் பேசாதே படித்துத்தேரு
கெடியான மாத்துத்தான் காணலாமே. (135)

காணலா மென்றுமே சுட்டுச்சுட்டு
காரியத்தைப் பாராமற் றிரியவேண்டாம்
வாணளை வதைத்துமே பேசவேண்டாம்
வடிவான மனந்தன்னை ஒக்கப்பண்ணு
சாணளச் சத்துசித்துச் செய்துநீயும்
சரியான பாகமதைத் தாக்கிப்பாரு
உண்ணவே பயிர்விளைந்த கதையைப்போலே
உற்றுமே பார்த்து நீ செய்திடாயே. (136)

காரியப்பதங்கம்.

செய்திடவே யின்னுமொரு பதங்கமார்க்கம்
செப்புகிறேன் செயமாகச் சுருக்குமெத்த
மைதிடவே காரியம் பலமும்நாலு
மகிழ்வாக அயக்கரண்டி தன்னிலிட்டு
நைதிடவே உருக்கிச்சாய் குமரிநீரில்
நலமாக மூவேழு தரமுஞ்சாய்த்து
பைதிடவே அயச்சட்டி தன்னிலிட்டுப்
பதிவாக வெடியுப்புப் பாதிபோடே. (137)

போட்டுமே வறுத்திடு நீ சாமம்ரெண்டு
பொன்னென்ற மஞ்சள்போற் சுண்ணமாகும்
காட்டுமே அதையெடுத்துத் தூரவைத்துக்
கனிவாகக் கல்லுப்புப் பலமும்நாலு
பூட்டுமே சீனமது பலமும்நாலு
புத்தியுடன் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
நாட்டவே சாமமரை வழித்து நீயும்
நலமாகச் சிறுசட்டி தன்னிற்போடே. (138)

போட்டுமே உலையில்வைத்து உருக்கிப்பாரு
போக்கோடே மஞ்சள்போ லுருகியாடும்
காட்டுமே அதைவழித்துப் புறம்பாய்வைத்துக்
கனமாக மூன்வருத்த வங்கத்தோடே
நாட்டுமே கல்லுப்பு உருகிநின்ற
நலமாகயிடைசேர்த்து நன்றாயாட்டி
நீட்டுமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நேராகப் புடமிட்டு எடுத்துவையே. (139)

வையப்பா தாளகமுஞ் சேருஒன்று
வகையாகத் திராவகத்தா லரைத்துச்சாமம்
மெய்யாக வில்லேதட்டிக் கதிரில்வைத்து
மேன்மைபெறக் கலேயபது ரெண்டுதேய்த்து
பொய்யப்பா போகாமல் உள்ளேயிட்டுப்
போக்கோடே மூடியே சீலேசெய்து
பையவே அடுப்புதனி லேற்றிநீயும்
பதிவாகச் சாமமெரி பருவமாமே. (140)

பருவமாம் சாமமெரி வழித்துநீயும்
பாங்காகக் கல்வமிட்டுக் கள்ளிப்பாலால்
உருவமா யரைத்துண்டை பண்ணிநீயும்
உறுதிபெற மூன்வங்கங் கவசங்கட்டி
துருவமா யொன்றுக்கு நாலுகட்டித்
துடியாகக் கதிரில்வைத் தெடுத்துநீயும்
தருவமாய் சீலேயது ஒன்றுசுத்தித்
தனிவாக அதின்பேரிற் கவசங்கட்டே. (141)

கவசமாய்க் கரியுப்புச் சுண்ணம்நேரே
கடிதாக யிடித்துமே கவசங்கட்டி
பவசமாய்க் குக்குடமாய்ப் போட்டெடுக்கப்
பதிவாகத் தாளகமுங் கவசத்தோடே
நவசமாய் நுழைந்துமே யிருந்துபோகும்
நலமாக யிப்படிக்குத் தரமும்நாலு
திவசமாய் வைத்துயெடு குருவுமாகும்
திட்டமாய்ச் செய்திடவே செயலுமாமே. (142)

செயலாக நபிமாரைத் தொழுதுபோற்றிச்
செய்புருக்கிப் பத்துக்கு ஒன்றுதானும்
பயமில்லா தேகொடுக்க மாத்துப்பத்துப்
பதிவான முறையாகும் பாருளோர்க்கு
நயமாகக் காவிக்கு மிறங்கும்பாரு
நன்னபிகள் செய்திடுவார் நாடிப்பாரு
தயவாக யேழைகட்கா யிறங்கிச்சொன்னேன்
தக்கபெரி யோர்புத்தி நல்லதாமே. (143)

நல்லாகச் சாஸ்திரங்க ளெல்லாந்தன்னை
நாடியே யுழைத்துநீ நாடிப்பார்த்து
கல்லாக மனதுதனி லெண்ணிநீயும்
கருத்துறவே யூணிப்பார் கடினமில்லை
வில்லான தனுவளைந்தா லம்புதைக்கும்
வீணாக வளையாத மரமுங்கேளு
பொல்லாத கம்பத்துக் காகுமாப்போல்
புகலரிய யாகோபு புகன்றார்தானே. (144)

தானென்ற நூலில்லா வாதிதானும்
தவித்துமே கேள்வியினாற் சுட்டுக்கெட்டு
ஊனென்ற சோத்துக்கு இடமில்லாமல்
உறுதியாய்த் தான்புலம்பித் திரிந்துகெட்டு
நானென்ற ஆணவத்தாற் கெட்டோமென்று
நாடியே பொய்சொல்லித் திரிவாரல்லால்
கானென்ற சுவானமது போலேசுற்றிக்
கருதியே யலைவார்கள் கணக்கிலாரே. (145)

கணக்கில்லா வாதந்தான் ரெம்பவுண்டு
கைபாக வரிசையது அதிலும்ரெம்ப
தணக்கமாய் களங்குசத்து அதிலும்ரெம்ப
தடையற்ற கட்டுவகை கோடாகோடி
பிணக்கில்லாச் செந்தூர மெழுகுகோடிப்
பிரியமுள்ள சுண்ணங்கள் கோடாகோடி
துணக்கமாய் வாதங்கள் இதிலுங்கோடி
துடர்ந்துமே வாதம்வந்தால் சூட்சந்தானே. (146)

சூட்சமாய்ப் புளியுப்புக் கண்டுதேரு
சுருக்காகத் திரைபாகம் பார்த்துநீயும்
பாச்சவே பாதையது மிகவும்பார்த்துப்
பதிவாக ஞானங்கள் மிகவும்பாரு
நாச்சமாய் மனதுதனி லுறுதியுற்று
நலமாகத் தானுணர்ந்து நாடிப்பார்த்து
பீச்சிட்ட பாவனைதான் பாலுபோலே
பேதமில்லாப் போலவே செய்துபாரே. (147)

டாரேநீ உலகத்தில் வாதிமார்கள்
பாதையிது தெரியாம லலைந்துசுத்தி
நாரேநீ உறுதிபெற்றுச் செய்யாமூடர்
நாடியே உறுதியற்றுச் சுட்டுக்கெட்டு
வாரேநீ திரைபாக மில்லாமற்றான்
வடிவான பொருளறியார் மார்க்கமில்லார்
தாரேநீ சொன்னபடி செய்யாமற்றான்
தாட்டிகமா யுறுதிமிக வேணுந்தானே. (148)

வேணுமே யேழையாம் வாதிக்குத்தான்
விதமாகப் புத்திதான் மிகவும்வேணும்
காணுமே நிறைபாக மறியவேணும்
கருதியே பொய்சொல்லா மார்க்கம்வேணும்
தாணுமே யலையாம லிருக்கவேணும்
தடையறவே சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
கோணுமே நிலையுடனே யிருக்கவேணும்
கோடிதான் யோகமெல்லாம் குறிப்புமாமே. (149)

குறிப்பாகத் துருசுணுட சுண்ணத்தாலே
கோடிகவ ராடலாங் கோடிவேலை
முறிப்பாகக் கட்டுத்தான் கோடியாகும்
முதற்கோடி முத்தியது கோடியாகும்
வெரிப்பான சுண்ணங்க ளதிலுங்கோடி
வேதைரெம்பச் சித்தியாந் துருசினாலே
சரிபோன படிசொன்னேன் சார்ந்துபாரு
சஞ்சலத்தை விட்டுநீ தாக்கிப்பாரே. (150)

மக்காதேசப் பெருமை

தாக்கியே மக்காவின் தேசந்தன்னில்
சரியான நபிமார்கள் மெத்தவுண்டு
ஆக்கியே வாய்பேசார் பொருமைமெத்தத்
துணையாக அவர்களுக்குப் பணமும்ரெம்ப
நோக்கியே அலையாம லிருப்பார்பாரு
நொடிக்குள்ளே வாதங்கள் ரெம்பச்செய்வார்
பாக்கியவான் போலேதா னிருப்பாரப்பா
பதிவாகச் செந்தூரஞ் செய்வார்பாரே. (151)

செய்யவே கைபாக வரிசைரெம்பத்
தேசத்திற் றங்கமது விளையும்பூமி
மெய்யாகச் சொல்லார்க ளுறுதிரெம்ப
மேதினியி லவர்பெருமை மெத்தவுண்டு
கைபாக வரிசைகள்தான் மெத்தவுண்டு
கலங்கார்கள் மந்திரத்தின் கருத்துளோர்கள்
சையோக நவரத்தினம் விளையும்பூமி
சஞ்சாரம் ரெம்பவுண்டு சாதிப்பாரே. (152)

ரசக்கிணறு.

சாதிப்பார் மக்காவின் தேசத்தோர்கள்
ச்ரியாக ஐந்நூற்யோ சனைதான் தூரம்
வாதிக்கு மலையுண்டு நடுவிற்ருனும்
வடிவான ரசக்கிணறு ஒன்றுஉண்டு
சோதித்த நபிமார்கள் மலையில்ரெம்பச்
சுருதியுற்றுக் குளிகையிட்டுச் சென்றுபோனேன்
பாதியே அவரைத்தான் கண்டுநானும்
பதிவாகத் தொண்டுகள்தான் பண்ணினேனே. ()

பண்ணியே சிறிதுநா ளங்கிருந்து
பதிவான ரசக்கிணறு எங்கேயென்றேன்
துண்ணியே சொன்னார்கள் குளிகையிட்டுச்
சுருதிபெறப் பறந்துமே கிணறிதோரம்
தன்னியே சுரக்குடுக்கை கையிற்கொண்டு
தாட்டிகமா யவ்விடத்திற் போயிறங்கி
சன்னியே கிணற்றினுள்ளே குடுக்கைதன்னைச்
சரியாக விட்டெடுக்கும் போதுதானே. (154)

போதுமே சூதமது துறத்தும்போது
துடியாக மேலண்டம் பறந்துபோனேன்
வாதுமே செய்யாமல் சூதந்தன்னை
வகையாக யெடுத்துமே மக்காதேசம்
சாதுவாய் வந்துவிட்டேன் நபிமாரோடே
சரியான துருசுசுண்ணம் வைத்துநானும்
நீதியாய் சூதத்தைக் கட்டிநானும்
நிலையான குளிகைரெண்டு செய்திட்டேனே. (155)

செய்துமே கையிலொன்று வாயிலொன்று
சிறப்பான இடுப்பிலொன்று கட்டிக்கொண்டேன்
பைதுமே லோகமெல்லாம் பறந்துசுற்றிப்
பதிவான மலைகளெல்லாம் பார்த்துநானும்
மெய்துமே வெகுகோடி முனிவர்சித்தர்
மேதினியில் ரசவாத மிகவுங்கண்டு
நைதுமே கைபாக வரிசையாக
நானறிந்து பாடினேன் நலமாய்த்தானே (156)

நலமாக நிகண்டதுதான் படித்துத்தேறி
நாடியே சுண்ணமறு நூறும்பாடி
பிலமாக அதைக்குறுக்கிச் சுண்ணந்தன்னைப்
பேதியா முன்னூறு பாடித்தேர்ந்து
கலனில்லாச் சுண்ணமுன் னூறுதன்னைக்
கருத்தாகக் குருநூல்நூற் றைம்பத்தைந்தில்
விலகாமல் வாதத்தின் மறைப்பையெல்லாம்
விருப்பமாய்ப் பாடினேன் விளங்கத்தானே. (157)

விளங்கவே ரசவாதங் கருணைகூர்ந்து
விரும்பினேன் செய்பாக வரிசையாக
உளங்குளிர மட்டங்கள் சேர்க்கும்பாகம்
உத்திநின்ற களங்கமெல்லாம் உறுதிகண்டு
தளங்காமல் வங்கமென்ற சுண்ணப்போக்கைத்
தாட்டிகமாய்ப் பாடினேன் தன்மையாக
பழங்கதைகள் பேசாமல் நூலைப்பார்த்துப்
படிப்படியாய்த் துறையெல்லாம் பாடினேனே. ()

பாடினேன் மதுரகவி யாகத்தானும்
பக்குவமாய்க் குறியறிந்து வாசித்தோர்கள்
கூடியே குணமறிந்தோர் செல்வமுத்தர்
கோடிதான நூலறிந்தோர் குணங்கள்கண்டோர்
வாடியே திரியாத பேர்கள்தானும்
வகையான துகையறிந்தோர் மார்க்கத்தோர்கள்
பாடியே பதமுற்றோர் பத்திபெற்றோர்
பகரரிய நூலறிந்தோர் பாகத்தோரே (159)

பாகத்தோர் நபிமார்கள் வாதங்கண்டோர்
பக்குவமாய்ச் சுண்ணமென்ற பதமுற்றோர்கள்
யோகத்தோர் கருவறிந்தோர் உறுதிபெற்றோர்
யுகங்கண்ட பேர்களுட பாதம்பெற்றோர்
வாகத்தோர் பேதங்கள் மிகவுங்கண்டோர்
வடிவான பதிகண்ட மார்க்கத்தோர்கள்
சாகத்தே நினைவில்வைத்துப் பணிந்தபேர்கள்
சாதகமாய் வாதம்வருந் தன்மைதானே. (160)

அயச்செம்பு.

தன்மையாய் அயச்செம்பு சாற்றக்கேளு
தரியாம லிதுலெகுவு முன்னேபாரு
உண்மையாய் நாதாக்கள் தன்மேலாணை
உற்றுமே பாராட்டா லுனக்குமாணை
வண்மையா யரபொடிதான் பலமும்பத்து
வடிவாகத் துருசதுவும் பலமும்பத்து
கண்மையாய்க் கெந்தியது பலமும்யேழு
கருத்தாகக் கல்வமிட்டு அரைக்கக்கேளே. (161)

அரைக்கவே பழச்சாறு தினமும்விட்டு
அடைவாக நாள்மூன்று அரைத்து நீயும்
பிரிக்கவே கதிர்தனிலே காயவைத்துப்
பின்புதான் நல்லெண்ணெய் சுவறவூற்று
கரைக்கவே கொதியிட்டு உருக்கித்திரு
கசடற்று வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
தரைக்கவே வெங்காரங் கொஞ்சமிட்டுத்
தானுருக்கு உருகியது மணியுமாமே. (162)

மணியெடுத்து அடித்திடவே வெட்டையாகும்
மயங்காமல் திக்கருந்த செம்புகாண
தனியாகச் சொல்லுறேன் உற்றுக்கேளு
தடையறவே கள்ளமது போக்கித்தானும்
வனியாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வடிவாகக் கற்றாழை நீரிற்றானும்
துணிவாகத் தரம்பத்து உருக்கிச்சாய்த்துத்
துடியாகத் தகடடித்துக் கல்வத்திட்டே. (163)

கல்வத்தி லிட்டுமே சொல்லக்கேளு
கனிவாகக் கன்னியா குமரிக்கந்தம்
நல்லொத்து யிட்டுமே நேகவாட்டி
நலமாக வில்லேதட்டிக் கதிரில்வைத்து
செல்லுத்து ஓடுதனி லிட்டுமெள்ளச்
செயமாகப் புடம்போட்டு எடுத்துக்கல்வம்
வில்வித்தை யதுபோலே முன்னீராட்டி (164)
விதமாகப் புடம்போடு தரமுமஞ்சே.

அஞ்சுபுடம் போட்டுமே யெடுத்துப்பாரு
ஆதியா மஞ்சள்போல் சிவந்துநிற்கும்
கெஞ்சியே வாதமெல்லா மேவல்கேட்கும்
கெடியான வங்கத்தின் பெருமைமெத்த
துஞ்சியே திரியாதே சொல்லக்கேளு
துடியாக முன்னுருக்கும் அயத்தினேரே
வஞ்சியே யிடைசமனுய்ச் சேர்த்து நீயும் (165)
வடிவாக முன்கன்னி நீராலாட்டே

ஆட்டியே புடம்போட்டுக் குகையிலிட்டு
அதட்டியே உருக்கிப்பா ரீயமாகும்
தேட்டிலே யிதுக்குப்பேர் அயயீயமாச்சு
திடமாகு மிதுவேலே சொல்லப்போகா
நாட்டிலே கிடையாது யிந்தயீயம்
நானறிந்து ஏழைக்கா யிரங்கிச்சொன்னேன்
கூட்டியே சகலமுந்தா னுள்ளேகொள்ளும் (166)
குணமாகு மிதன்பெருமை கூறினேனே.

கூறினே னிதன்பெருமை நபிமாரெல்லாம்
கூறியது சித்தரெல்லாஞ் சொல்லமாட்டார்
பாரிலே சொல்லாதே போக்கைத்தானும்
பதிவாக நான்வேதம் புகுந்தாலே
சாரியே நிசந்தன்னைச் சொல்லிவிட்டேன்
சரியாக யேழையாம் வாதிக்குத்தான்
ஊரியே உழைத்தோர்க்குக் கிட்டுங்கிட்டும் (167)
உண்மையிது சத்தியமா யுறுதிதானே.

பஞ்சமித்திரம்.

உறுதியா யிப்படிக்கு வைத்து நீயும்
உண்மைபெறப் பஞ்சமித்தி ரத்தைக்கேளு
அருதியாய் நல்லெண்ணெய் தேங்காய்ப்பாலும்
அடைவான நெய்யோடு துப்பாக்கூட்டி
வருதியா யிலுப்பயெண்ணெய் யிந்தஅஞ்சும்
வளமாக இடைசமனாய்க் கூட்டிக்கொண்டு
பருதிபெற முன்சத்து தனையுருக்கிப்
பாகமாய் மூன்றுதரஞ் சாய்த்திடாயே. (168)

சாய்த்திடவே காரமஞ்சள் தானேபோகும்
சரியான வங்கமது குருவுமாகும்
ஏத்திடவே உடைத்துப்பா ருடையுங்கண்டாய்
இதமான வங்கமது வெட்டையாகும்
நத்திடவே வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து
நலமாக உருக்கியே தங்கமொன்று
கோத்திடவே சேர்த்தூத மாத்துயெட்டு
குணமாகும் விற்றுமே செலவுசெய்யே. (169)

செய்துதான் பின்புமே சொல்லக்கேளு
செயமான வங்கவெட்டை பலமும்நாலு
கைதுமே தங்கமொன்று நாகமொன்று
கருணைதரச் சேர்த்துருக்கிப் பின்புநீயும்
நைதுமே வெள்ளைபோல் வெட்டையாகும்
நாட்டிலே சொல்லாதே ரசமுங்கெந்தி
மைதுமே யிடைசமனாய்ச் சேர்த்துநீயும்
மகிழ்வாகக் கல்வத்தி லாட்டிடாயே. (170)

ஆட்டியே யிருசாமங் கன்னிப்பாலால்
அதைவழித்து வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய்ப் புடம்போடு சிவப்புமாகும்
தனையெடுத்து அல்லாவைத் தொழுதுபோற்றி
காட்டியே நவலோகம் நூற்றுக்கொன்று
கர்த்தனுட பாதத்தைத் துதித்துப்போற்றி
தேட்டுவரு மென்றுமே கொடுத்துருக்குத்
திடமான மாத்துத்தான் பத்துமாமே. (171)

பத்தான செந்தூரம் தேனிற்றானும்
பணவிடைதா னந்திசந்தி தினமுமுண்ண
வித்தார மாகவே தேகந்தானும்
விதமான தங்கம்போல் மேனியாகும்
கத்தாவைப் போலவே தேகங்காணும்
கனிவாகக் கற்போலாம் நோய்களெல்லாம்
சித்திபெற்றுத் தவிடுபொடி யாகும்பாரு
செல்வன்யா கோபுசொன்ன திறமைதானே. (172)

தானென்ற செந்தூரம் நபிமார்சொன்ன
தாட்டிகத்தை உங்களுக்குச் சாற்றினேன்பார்
ஊனென்ற காயசித்தி உடனேயாகும்
உறுதிபெற நரம்புதான் பசுமையாகும்
வானென்ற கண்தானும் செவ்வலரிபோலாம்
வடிவான நபிமார்க ளாடுமாட்டு
கோனருளால் பத்தியமா யுண்டுதேரு
குணமாகு மணமாகுங் கூர்ந்துபாரே. (173)

கூர்ந்துபார் நபிமார்கள் சொத்தைத்தானும்
குணமாக ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
வார்த்துமே பாகமாய்ச் செய்துகொள்ளு
வடிவான விந்ததுவும் வருகாதையா
தார்ந்துமே லெழுங்கி யோடிடாது
தாட்டிகமாய் மேனியது வச்ரகாயம்
நார்ந்துமே மேனியது யிப்படிக்கு
நலமாகும் பொருளைத்தா னடிப்பாரே. (174)

நாடியே யுலகத்தில் வாதம்பொய்யோ
நலமாகக் கைபாகம் பொய்யேயில்லை
கூடியே சீஷனுடன் மருவவேணும்
குணமாகப் பணிவிடைகள் கூறவேணும்
தேடியே மனதொத்த சீஷன்வேணும்
திடமான கைபாக வரிசைவேணும்
ஓடியே திரியாதே அயத்தின்செம்பை
உற்றுணர்ந்து பார்க்கவே உறுதியாமே. (175)

உறுதியாய்ப் பத்துகிற பாகம்வேணும்
உண்மையாய்ச் சரக்கதுவும் நிறுக்கும்பாகம்
அறுதியாய்ச் செய்திடவே பலனுமாகும்
ஆடியே திரியாதே ஒன்றுமில்லை
நிருதியா யுன்னினைவிற் பூணவேணும்
நித்தமுந்தான் சரக்குகளைப் பார்க்கவேணும்
குருதிபோல் தேகத்தி லிருக்கவேணும்
கூகூகூ வாதமிதிற் கொள்ளையாமே. (176)

அப்பிரேகச்சத்து.

கொள்ளையா மப்ரேகச் சத்துக்கேளு
கொடியான அப்பிரக முதற்றரந்தான்
துள்ளையாம் ரெத்தவர்ணம் இரண்டாம்பச்சம்
துடியான கிருஷ்ணவர்ணம் மூன்றும்பச்சம்
வள்ளையாங் கொள்ளிலையின் சாறுதன்னில்
வடிவாக நாள்மூன்று டோளைக்கட்டி
பள்ளையாம் சட்டிதனி லெரித்துவாங்கு
பதிவாக அப்பிரகஞ் சுத்தியாமே. (177)

சுத்தியது வானஅப் ரேகம்நாலு
துடியான வெள்ளைப்பா சாணம்நாலு
முத்தியது ரெண்டுமொன்று யரைத்து நீயும்
முக்கியமாய்க் குகையிலிட்டு உருக்கிப்போடு
புத்தியா யப்பிரகஞ் சத்துமாகும்
புகலரிய சத்திதிறஞ் சொல்லக்கேளு
நித்தியமாய் வெங்கலம்போற் றகர்ந்துநிற்கும்
நிலையான சத்துவித னேர்மைபாரே. (178)

நேர்மைபா ரப்பிரேகச் சத்துதன்னை
நிலையாக உருக்கியே மெழுகுகட்டி
வார்மையா யுருக்கியே கிண்ணிவார்த்து
வளமாகக் கிண்ணியைத்தான் சீவிப்போட்டு
தார்மையாய்க் கிண்ணிக்குள் சரியாய்ச்சூதம்
தாக்கிட்டு ஊமத்த னிலையின்சாறு
கோர்மையாய் நிரையாக விட்டுநீயும்
கொதியிட்டு இருசாமஞ் சென்றுபாரே. (179)

சென்றுபார் இட்டலிபோற் கட்டிப்போகும்
செயமாகும் என்வசனம் பொய்போகாது
அன்றுமே உருட்டியே பாணிதன்னில்
அடைவாகப் போட்டுமே திரிநாள்வைத்து
கன்றுமே யெடுத்து நீ உண்டையாகக்
கணக்காக யிருபத்தொன் றுண்டைபண்ணி
நன்றாகச் செய்துமே கதிரில்வைத்து
நலமாக அப்ரேகக் கவசம்பண்ணே. (180)

பண்ணியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
பதிவாகக் குக்குடத்தின் புடமுமிட்டால்
நண்ணியே சூதத்தை யெடுத்துப்பாரு
நலமாகக் கதிரினிலே நின்று ஆடும்
உண்ணியே உருகினதோர் சூதம்நாலு
உறவாகத் தங்கமொன்று நாகமொன்று
கன்னியே உருக்கியெல்லாங் கல்வத்திட்டுக்
காரணமா யின்னுமொன்று கருதிக்கேளே. (181)

கருதியே கெந்தகமும் பாதிபோட்டுக்
கல்வத்தி லிட்டுஅரை நாலுசாமம்
பருதியே கன்னியா குமரிகந்தம்
பதிவாக யின்னீரி லரைத்துமெள்ள
நருதியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நலமாக ஒருபுடத்தில் செந்தூரந்தான்
உருதியதா யாகிவிடும் உண்மையாகும்
உற்றநவ லோகத்தில் நூற்றுக்கொன்றே. (182)

ஒன்றாகச் செந்தூரந் தனைக்கொடுக்க
உற்றுமே நவலோகந் தங்கமாகும்
பன்றான நோயெல்லாந் தவுடுபொடியாகும்
பதிவான காயமது கற்போலாகும்
தின்றான தீனியுமோ ரெம்பவேணும்
திடமாகும் நரம்புகளு மிறுகியேறும்
கன்றான பசுப்போலே கறக்கும்பாரு
கனிவான பொருளறிந்தால் வாதிதானே. (183)

வாதிதா னென்றுவாய்ப் பேச்சுப்பேசி
வகையாகச் சொல்லியே மாண்டுபோன
சாதிதான் மெத்தவுண்டு உலுத்தமாண்பர்
தன்னைத்தான் ரெம்பவே மெச்சிக்கொள்வார்
கோதியே கிளிப்பிள்ளை பேசுமாப்போல்
குறும்பாகப் பேசியே கூறிக்கூறி
நீதிதான் சொல்வார்போல் பொய்கள்சொல்லி
நீனிலத்திற் பேசியே உருளுவாரே. (184)

உருளுவார் புரட்டுள்ள வாதிமார்கள்
உற்றுமே நூலெல்லாம் பொய்யேயென்பார்
அருளுவார் மதம்பிடித்துப் பேசுவார்கள்
ஆதியந்தந் தானறியா மட்டிவாதி
குருளுவார் பொய்சொல்வார் கொடியர்கண்டாய்
குணமில்லார் மணமில்லார் குருட்டுவாதி
வருளுவார் வகையறியார் வடிவமில்லார்
வண்மைகளைச் சொல்லாதே மார்க்கத்தோரே. (185)

நாகச்செம்பு.

மார்க்கமா யின்னமொன்று நாகச்செம்பு
வடிவாகச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு
ஏர்க்கவே நாகமது பலமும்பத்து
இதமாக உருக்கிமெள்ள யிலுப்பைநெய்யில்
கார்க்கவே தரம்பத்து உருக்கிச்சாய்த்துக்
கனிவாகக் கசடற்றுக் கனிவாய்நன்றாய்
பார்க்கவே குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
பதிவாக எட்டுக்கு ரெண்டுகேளே. (186)

ரெண்டுமே சூதமது சேர்த்துருக்க
நிலையாகப் புட்டாகு மெடுத்துவைத்து
கண்டுமே துரிசியது பலமும்பத்து
கனிவாகச் சட்டிதனில் கிளிஞ்சில்நீறு
பண்டுபோல் பாதியிட்டு அதன்மேல்நீலன்
பதிவாக வைத்துமே கிளிஞ்சில்நீற்றை
விண்டுமே அதன்மேலே கொட்டிநீயும்
விதமாக அமுக்கியே சொல்லக்கேளே. (187)

சொல்லவே அடுப்புதனில் வைத்துமூடி
சுகமாகத் தீயெரிப்பாய் நாலுசாமம்
கொல்லவே பிரித்துப்பார் துருசநீறிக்
குணமாக யிருந்துவிடுங் காரமாக
நல்லவே முன்நாகந் தன்னிலிட்டு
நலமாகக் கற்றாழைச் சாறுவிட்டு
தல்லவே யிருசாம மரைத்துப்பின்பு
தடையறவே தாளகத்தை நிறுத்துக்கேளே. (188)

நிறுத்துமே மூன்றுதான் நேரேசேர்த்து
நேராகக் கன்னிநீர் தன்னைவிட்டு
பருத்துமே யிருசாம மரைத்துவில்லை
பக்குவமாய்க் குக்குடத்தின் புடமுமிட்டு
தருத்துமே யெடுத்துநீ கல்வமிட்டுத்
தகைபெறவே காரீயம் பலமும்பத்து
வறுத்துமே தகடடித்துப் பிச்சுப்போடு
வடிவாகக் கன்னிநீர் தன்னாலாட்டே. (189)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகக் குக்குடத்தின் புடமுமிட்டு
நாட்டியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
நலமாகக் கல்வமிட்டு முன்னீராலே
பாட்டியரை வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாக முன்போலே புடமுமிட்டு
நாட்டிலே சொல்லாதே யிப்படிக்கு
நலமாக அஞ்சுபுடம் போட்டிடாயே. (190)

போட்டிடவே மஞ்சளா மெடுத்துநீயும்
போக்கோடே முன்நாகம் புடமுமிட்டு
ஆட்டியே வில்லைக்குப் பாதிகாரி
அடைவாகச் சேர்த்துமே கல்வமிட்டு
நாட்டியே கன்னிநீர் தன்னாலாட்டி
நலமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
பாட்டியே புடமுமிட்டு யெடுத்துநீயும்
பதிவாகப் பின்புதான் பகரக்கேளே. (191)

பகரவே சரவுலையில் வைத்தூதூது
 பதிவாகத் தங்கம்போல் மணியுமாகும்
நகரவே பஞ்சமித்தி ரத்திற்சாய்த்து
 நாடியே யெடுத்துஅடி உடைந்துபோகும்
தகரவே வங்கவெட்டை யிதற்குப்பேரு
 தாட்டிகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேரு
உகரவே வூதியெடு தங்கமொன்று
 உற்றுமே சேர்த்துயெடு மாத்துயெட்டே. (192)

எட்டான மாத்ததுவை விற்று நீயும்
 இதமாகச் செலவுசெய்து வைத்துக்கொண்டு
கட்டாகச் செந்தூரஞ் செய்யக்கேளு
 கலங்காமற் பலம்நாலு குகையிலிட்டு
திட்டமாய் நாகமது பலமுமொன்று
 திடமான தங்கமது பலமுமொன்று
பட்டமாய்ச் சேர்த்துருக்கப் புட்டுமாகும்
 பதிவாக ரசகெந்தி யிடையேசேரே. (193)

இடைசேர்த்துக் கல்வமிட்டு முன்னீராட்டி
 யிதமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நடைபெறவே புடமிட்டு யெடுத்துப்பாரு
 நலமாக முருக்கம்பூப் போலேயாகும்
குடையாக நவலோகந் தன்னிலீயக்
 குற்றமில்லா மாற்றுதான் பத்துமாகும்
சடையில்லா உப்புக்குங் காவிக்குந்தான்
 சரியாக யிறங்கிவிடுந் தன்மைதானே. (194)

தன்மையாய்ச் செந்தூரம் பணமவ்வீதம்
 தாக்கிடவே மண்டலத்தி லந்திசந்தி
உண்மையா யுண்டுவர நோய்களெல்லாம்
 உருதிபெறத் தவிடுபொடி யாகும்பாரு
வண்மையாய்ச் சடலமெல்லா மிறுகியேறும்
 வடிவாக வாய்பேசா திருந்துகொள்ளு
துண்மையல்ல இம்மொழிகள் நிசமதாகும்
 துடியான சித்தியெல்லாம் வங்கந்தானே. (195)

வங்கத்தைச் சத்தியென்ற மார்க்கங்கூட்டு
வடிவான பொருளறிந்து செத்தசெம்பை
பங்கம்வா ராமலே யெடுத்து நீயும்
பதிவான பாதையிற் பத்திக்கொள்ளு
சிங்கம்போ லெல்லாமுஞ் சித்தியாகும்
சிறப்பான பொருளெல்லாம் எளிதிலாகும்
உங்கள்குல மீடேற உறுதிபாரு
உற்றுணர்ந்த சித்தியெல்லா முறுதிகாணே. (196)

காந்தச்சத்து.

சித்தியாங் காந்தமது பலமும்பத்து
சிறப்பாகக் குன்றிபோ லுடைத்துக்கொண்டு
முத்திபெறச் செம்மறிப்பால் படிதான் நாலில்
முனிவாகப் போட்டுமே யெரித்துத்திரு
சத்தியமாய்ச் சுத்தியது ஆகுங்கண்டாய்
தனையெடுத்துக் கல்வத்தி லிட்டுநீயும்
பத்தியாய்க் கெந்தகமும் பலமுமூன்று
பதிவான வெங்காரம் பலமுமொன்றே. (197)

ஒன்றாகத் துருசியது பலமுமைந்து
உறுதிபெற யிதுவெல்லாங் கல்வத்திட்டு
நன்றாகப் பழச்சாறு சாமமாட்டி
நலமாக வழித்துவில்லை காயவைத்து
பன்றாகப் புடம்போட்டு யெடுத்து நீயும்
பரிவாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
கன்றாக மணிபோலே சத்துமாகும்
காரியமா யிப்படிக்குத் திரமுமஞ்சே. (198)

திரமாக அஞ்சுதா முருக்கிப்பாரு
திட்டமாய் வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
அரமாகக் கசடகற்றி யெடுத்துநீயும்
அலையாமற் சொல்லுகிறே னதனைக்கேளு
பரமான காரீயம் பலமும்பத்து
பத்தியா யெடுத்துமெள்ளக் கன்னிநீரில்
வரமாக உருக்கிச்சாய் சுத்தியாச்சு
வடிவாகத் தகடடித்து மார்க்கங்கேளே. (199)

சேளுமே கற்ருழைப் பாலிஞலே
கெடியாக யிருசாம மரைத்துவில்லை
நாளுமே கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
நபிமார்கள் தானறியப் புடமுமிட்டு
பாளுமே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
பத்தியதா யிப்படிக்குத் தாமும்பத்து
காளுமே யெங்காமற் போட்டெடுத்துக்
காரணமாய்ப் பின்புதான் சொல்லக்கேளே. (200)

சொல்லவே காந்தத்தின் சத்துநேரே
சுருதிபெறச் சமனிடைக்குச் சேர்த்து நீயும்
வெல்லவே ரெண்டுமொன்ருய்க் கல்வத்திட்டு
விருப்பமா யரைத்துவில்லை காயவைத்து
நல்லவே புடமிட்டு யெடுத்துப்பாரு
நபிமார்போ லிருக்குமது சத்துத்தானும்
வல்லமையாய்க் குகையிலிட்டுக் காரங்கூட்டி
வடிவாக உருக்கிடவே வெண்மையாமே. (201)

வெண்மைதனைப் பஞ்சமித்தி ரத்திற்சாய்த்து
விருதுபடக் கசடகற்றிப் பின்புநீயும்
உண்மையா யுடைத்துப்பார் வெட்டையாகும்
உறுதிபெற வெட்டைதனை ஊதிப்போட
தன்மையாய்ச் செம்பாகும் செம்புதன்னைத்
தானெடுத்து வெள்ளிதனி லெட்டிரண்டு
கண்மையாய்ச் சேர்த்துருக்கத் தங்கமாகுந்
காரணமாய்த் தங்கமதைக் கூடச்சேரே. (202)

சேருமே யெட்டுக்கு ரெண்டுதானும்
சித்தமாய் மாற்றததுவு மெட்டுமாகும்
பாருமே யிதைவித்துச் செலவுசெய்து
பகாவே செந்தூரம் பண்ணக்கேளு
வேருமே காந்தத்தின் செம்புநாலு
விதமாக நாகமொன்று தங்கமொன்று
சாருமே குகையிலிட்டு உருக்கிப்பாரு
தாஞுடைக்கக் களங்காகுந் தன்மையாமே. (203)

தன்மையாய் ரசகெந்தி கூடச்சேர்த்து
தடையறவே கல்வமிட்டுக் கன்னிப்பாலால்
உண்மையா யரைத்துமெள்ள வில்லைகட்டி
உறுதிபெறக் கதிரில்வைத்துப் புடமும்போட
துண்மையாய்ச் சிவந்துசெந் தூரமாகும்
துரிதமிதை நவலோகந் தன்னிலீய
அண்மையாய்த் தசமாற்று மறிந்துபாரு
ஆதியாம் நபிமார்கள் சொத்துமாமே. (204)

சொத்தெடுத்துக் கந்திரிகள் மிகவும்பண்ணிச்
சுருதிபெறச் சோருக்கி யேழைக்குத்தான்
சத்தெடுத்துக் கொடுத்ததுபோற் சோறுதன்னைச்
சரியாகக் கொடுத்துவிடச் சுகிர்தமாகும்
நித்தமுந்தான் செய்யாதே வருஷமொன்று
நிலையாகப் பண்ணியே உலகில்விற்று
புத்தியாய் வைத்துமே உண்டுதேறப்
புகலரிய யிம்மார்க்கம் புத்தியாமே. (205)

ஆமேதான் காந்தத்தின் செந்தூரந்தான்
அடைவாக மண்டலமு முண்டுதேறு
நாமேதான் தேகமது கற்றூணாகும்
நாதாந்த சாரமது நளுகாதையா
பூமேவு நிலந்தனிலே புத்தியுண்டாம்
புகலரிய நபிமார்க ளாடும்நேர்மை
காமேவு செந்தூரந் திறமுமெத்த
கனிவாக வுண்டுமே கண்டுகொள்ளே. (206)

கண்டுகொண்ட பிற்பாடு மனதடக்கம்
கருத்தாலே பொய்களது சொல்லவேண்டாம்
தண்டுமுண்டாய்த் திரியாதே யிந்தநூலைச்
சரியாகப் புத்தியாய்ப் படித்துக்கொள்ளு
பண்டுபழங் கதைபேசாப் பருவஞ்செய்து
பதிவான பொருளைத்தான் பத்தியாக்கி
முண்டுபடாக் காந்தத்தின் செய்புவைத்து
முடித்துமே நபிசொத்தை மூனிந்துபாரே. (207)

முனிந்துமே அயச்செம்பு காந்தச்செம்பு
முனிவான கெந்தகத்தின் செம்புகூட
கனிந்துமே சத்தெல்லாஞ் செம்பெடுக்கக்
கருகியே வங்கத்தைப் பங்கம்பண்ணி
வனிந்துமே கூட்டியரை பின்புருக்கி
வடிவாக ஊதியெடு மார்க்கமாகும்
பணிந்துமே சொல்லாதே பொருள்களுண்டாம்
பாதையிது வெகுபாதை பத்தியாமே. (208)

பத்தியாம் பொருளேது வென்றாற்கேளு
பதிவான கைபாக வரிசையாலே
முத்தியாய்ச் செய்துதான் மார்க்கங்கண்டால்
முடியாமற் கைபாகந் தப்பிற்றானல்
நித்தியமா யொன்றுதான் முடியாதாகும்
நினைவாகப் படித்திட்டாற் பலனுமாகும்
சித்திபெறச் சொன்னதொரு மார்க்கந்தன்னைத்
திட்டமாய்ச் செய்துமுடி திண்ணந்தானே. (209)

லோகத் திராவகம்.

திண்ணமாம் லோகமென்ற புகைநீர்தன்னைச்
சிறப்பாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
தண்மையாய்ச் சகலசத்துக் கிதுவே ஆதி
தடையறவே கட்டுகளுக் கிதுவே ஆதி
உண்மையாய் லோகத்துக் கிதுவே ஆதி
உறுதிபெறக் கட்டுதற்கு வரிசையாகும்
உண்மையாய்த் தாளகந்தான் லோகத்துக்கு
உறுதிபெற யிதனுண்மை உத்துப்பாரே. (210)

உத்துமே வெடியுப்புப் பலந்தானாறு
உறுதிபெறச் சீனமது யெண்பத்தஞ்சு
பத்திபெறத் துருசதுவும் நாற்பதாகும்
பதிவான சாரமது இருபதாகும்
முத்தியே கல்லுப்புப் பலந்தான்பத்து
முனையான பூநீறு பலந்தானஞ்சு
நித்தியமாய்க் கெந்தியுப்பு பலந்தான்மூன்று
நிலையாக உருவியுப்பு பலந்தானென்றே. (211)

ஒன்ருகக் கழுதையுட கத்தத்தாட்டி
ஓகோகோ யிருசாம மரைத்தபின்பு
நன்ருகக் கடத்திலிட்டு வாலைமூடி
நலமாக உளுந்துமண் பெலக்கச்செய்து
கன்ருக அடுப்பேற்றித் தீயைமூட்டிக்
காரியமாய் மூன்னீறு வெள்ளையாகும்
பன்ருன வெள்ளையைத்தான் நீக்கிப்போடு
பதிவாக மஞ்சள்நீர் தன்னைவாங்கே. (212)

வாங்கியே அரக்கென்ற குப்பிதன்னில்
வடிவாக அடைத்துமே சொல்லக்கேளு
ஏங்கியே திரியாதே சரக்கெல்லாந்தான்
இதில்நனைத்துச் சூடனுட தீயில்வாட்டு
பாங்கியே கட்டியது கரியிலாடும்
பாதையாம் வெகுகோடி பாதையாகும்
தூங்கியே திரியாதே யிந்தவித்தை
தொல்லுலகில் ரசவாத மேவலாமே. (213)

மேவலாங் கட்டினதோர் சரக்கைத்தானும்
மிதமில்லா நவலோகந் தன்னிலீய்ந்தால்
காவலாந் தனித்தனியே வேதையாகும்
கைகண்ட வித்தையிது கருவாய்ப்பாரு
தாவலாஞ் சொன்னதெல்லாம் நிசமுமாகும்
சத்தியமாய்ப் புகைநீரை வைத்து நீயும்
தூவவே சரக்கெல்லாம் சொல்முன்கட்டும்
தொல்லுலகில் ரசவாதந் துஞ்சும்பாரே. (214)

துஞ்சவே மக்காவின் தேசந்தன்னில்
துடியாக நபிமார்க ளாடுமாட்டை
பஞ்சதுபோற் பறக்காமற் சொல்லிப்போட்டேன்
பதிவாக நாதாக்கள் செய்யுமார்க்கம்
கொஞ்சவே சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
கொள்ளைகொள்ளை வாதமிது நேர்மையாகும்
தஞ்சமாய்ப் பார்த்தாக்கால் சகலசித்துந்
தடையறவே யாடலாந் தாக்கிப்பாரே. (215)

தாக்கிட்டு ஒருயிடத்தி லிருந்துநீயும்
தாட்டிகமாய்ப் பொய்சொல்லா வேதைபாரு
நோக்கிட்டு யென்னேரம் நூலைப்பாரு
நொடிக்குள்ளே வாதமது யேவலாகும்
பாக்கிட்ட ததுபோலே செந்தூரங்கள்
பதிவாக வைத்துமே பலனைக்கண்டு
சாக்கிட்டுத் திரியாதே சூஸ்திரத்தைத்
தன்மையாய்ப் பார்த்தாக்கால் நிலைக்கும்பாரே. ()

நிலைக்கவே வங்கத்தை முன்னேபார்த்து
நேராக நிருத்தியே சத்திேடுட
பலைக்கவே சேர்த்தரைக்கப் பலனுமாகும்
பதிவாக நிரணயமாய்ப் பாரிலோர்க்கு
கலைக்கவே பத்திமுத்தி வைராக்கியங்கள்
கனிவாகப் பொருளறிந்து கணக்குங்கண்டு
தலைக்கவே அறிந்துநீ செய்துகொண்டால்
தங்கரச வாதமது தாக்கும்பாரே. (217)

வாலைரசச் சேந்தூரம்.

தாக்குமே வாலைரசச் செந்தூரத்தைத்
தடையறவே சொல்லுகிறே னுற்றுக்கேளு
பாக்குமே வெடியுப்புப் பலமும்பத்து
பதிவான சீனமது பலமுங்கேளு
காக்குமே பலமதுதா னிருபத்தைந்து
கனிவாக ரெண்டுமொன்று யிடித்துநீயும்
வாக்கினுல் கலையத்தி லிட்டுவாலை
வைத்துமே அடுப்புதனில் வடிவுபாரே. (218)

வடிவாகத் தீயெரிக்க வெள்ளைநீராம்
வண்மைபெற வெள்ளையத்தா நீக்கிப்போடு
நொடிதனிலே மஞ்சள்நீர் பிடித்துநீயும்
நொடிக்குள்ளே அரக்கென்ற குப்பிதன்னில்
படிவாக அடைத்துமே பின்புநீயும்
பதிவாகச் சூதமது பலமும்பத்து
குடிவாகப் பீங்கானில் விட்டுநீயும்
குணமாகப் புகைநீரை விட்டுவையே. (219)

விட்டுவைத்து மூடியபின் நாலுரெண்டு
விதமாகப் பார்த்திடவே சூதந்தானும்
கட்டுமே காளான்போற் பூத்துநிற்கும்
கனிவாகச் சூரியால் பூத்தபூவை
நட்டுமே யெடுத்துடனே வேறேபீங்கான்
நலமாக வைத்துமே புகைநீருத்து
பட்டுமே பொருமியது பூக்கும்பாரு
பதிவாக உமிநெருப்பில் வருத்திடாயே. (220)

வருத்துமே காசிமேர் தனிலேவைத்து
வகையாகக் குப்பிக்கு அரையதாக
பருத்துமே பல்ப்பக்கல் மேலேயிட்டுப்
பதிவாக மண்ணேழு சீலைசெய்து
குருத்துமே சட்டிதனிற் சலங்கைமண்ணைக்
குணமாகப் பாதியிட்டுக் குப்பிவைத்து
தருத்துமே அதின்பேரில் மணலையிட்டுத்
தடையறவே அடுப்புதனி லேத்திடாயே. (221)

ஏத்தியே தீயதுமுன் நான்குசாமம்
இதமாக யெரித்துமே பிரித்துப்பாரு
நாத்திசையு மெய்க்கவே மஞ்சள்போலாம்
நல்லமஞ்சள் தனையெடுத்துப் பீங்கானிட்டு
பாத்திபனூர் மெய்க்கவே திராவகத்தைப்
பதியவிட்டு உமிநெருப்பில் வருத்துநீயும்
காத்திடவே முன்போலே குப்பிதன்னிற்
கனியவடை அடுப்பேத்தி யெரித்துக்கொள்ளே. ()

கொள்ளவே யிப்படிக்குத் தாமுமஞ்சு
கூக்குறலா யெடுத்துமெள்ளப் பிரித்துப்பாரு
தள்ளவே செந்தூர மருணன்போலாம்
தானெடுத்துப் பலம்பத்து நிருத்துக்கல்வம்
விள்ளாதே தங்கமது பலமுமொன்று
விதமான நாகமொன்று சேர்த்துருக்க
கள்ளமாய்ப் புட்டுப்போல் நொருங்கிப்போகும்
கைகண்ட படிதானுங் கண்டுபாரே. (223)

கண்டுமே கல்வத்தி லிட்டுத்தானும்
கனிவாக முன்புகைநீர் விட்டுஆட்டி
தொண்டுபட உமிநெருப்பில் வருத்தும்போது
தொல்லுலகிற் காசியென்ற மேருக்கிட்டு
பண்டுமே பனிரெண்டு சாமந்திதான்
பக்குவமா யெரித்துமெள்ள வாங்கிநீயும்
கொண்டுமே நபிமாரைத்தொழுதுபோற்றிக்
குணமாகப் பிரித்துமே பார்த்திடாயே. (224)

பாரத்திடவே முருக்கம்பூ போலாஞ்செம்பு
பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
ஏத்திடவே கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
இணமாக மாத்ததுவுஞ் சொல்லக்கேளு
சாத்திடவே மாத்ததுதான் பனிரெண்டாகும்
சஞ்சலங்க ளெல்லாமுந் தன்மையாகும்
கூத்திடவே குலமெல்லாம் வாழுங்கண்டீர்
குணமாக யாகோபு கூறினாரே. (225)

கூறினார் சகலசித்தும் விளங்கத்தானே
குணமான சகலநூ லெல்லாம்பார்த்து
ஊறியே சோதித்துச் சரக்குங்கண்டு
உற்றுமே நபிபோலே பிறக்கவென்று
சாரியே வடநூலும் பார்த்துத்தேறி
சரீரமது காயசித்தி பண்ணிநீயும்
பாரிலே பார்த்துநீ பகைமையில்லாப்
பதிவாக யாகோபு பாலித்தாரே. (226)

பாலித்த பொருளறிந்து வாதிமார்கள்
பக்குமாய்ச் செய்துமே பாவித்துத்தான்
கோலித்த நூல்பார்த்து வர்மங்கண்டு
குறிப்பாகச் செய்துமே குணமும்பார்ப்பார்
சாலித்து உந்தியென்று மிருப்பாரய்யா
சரிவரவே ஞானங்கள் மிகவுஞ்சொல்வார்
ஆலித்து நபிபதத்தை வணங்குவார்கள்
அம்மம்மா நபியோகம் ஆண்மையாமே. (227)

ஆண்மையாய்ப் புத்தியில்லா வாதிமார்கள்
அடைவான நூல்வர்மந் தெரியாதாலே
காண்மையாய்ச் சொல்லியே புலம்பிக்கத்திக்
கைமுறைகள் தெரியாமற் சுட்டுக்கெட்டு
தாண்மையாம் பணமிருந்தால் சோத்துக்காகும்
தாக்கமா யானுவத்தாற் கெட்டோமென்று
வாண்மையாய்ச் சொல்லியே யூதுவார்கள்
வகைகாணார் துகைகாணார் வழக்கமாமே. (228)

வழக்கமாய் ரசவாதி லோகவாதி
வடிவான நூல்வாதி மக்காதேசம்
கழக்கமாய்ப் பொருள்வாதி யேனவாதி
காட்டுமே வாதிதான் மூலிவாதி
பழக்கமாய் முட்டாளாய் வாதிதானும்
பதிவான குணங்கெட்ட வாதியோர்க்கு
துழக்கமாய் வாதந்தான் மிகவும்வேணும்
தொல்லுலகி லில்லாதாற் துன்பமாமே. (229)

துன்பமாய்ப் பொய்வாதி பொய்கள்சொல்லிச்
சுருதிதா னறியாமற் சுட்டுக்கெட்டு
இன்பரச வாதந்தான் பொய்யாமென்று
இடும்பாகச் சொல்லியே மனதுநொந்து
அன்பாக உலகமிதிற் சஞ்சரித்து
அடைவாக வேலைசெய்து அலைவார்கோடி
தென்பாகக் கல்லார்கள் கோடிகோடி
தேசமெல்லா மிப்படிக்குக் கெட்டார்தானே. (230)

தானென்ற நூலறியா ரசட்டுவாதி
தாட்டிகமாய் வெள்ளியோடு தங்கஞ்செய்து
கானென்று உருக்கியே மட்டப்போட்டுக்
கனமாகக் கடைதனிலே காட்டிக்காட்டி
ஊனென்று போட்டபொன்போய் வீணாய்ப்போச்சு
உதவாது யென்றுசொல்லி உறுதியற்று
பானென்ற சோத்துக்கு யிடமில்லாமற்
பத்தியா யலைந்துமே மாண்டார்தானே. (231)

மாண்டுமே போகாமல் வங்கந்தன்னை
மாளமட்டு மரைத்துமே புடத்தைப்போட்டு
காண்டுமே சேர்த்தரைப்பாய் சத்திேேடு
காதலா யுருக்கூது செம்புதன்னை
வேண்டுபடி செம்பெடுத்து வெள்ளிதன்னில்
விதமாகப் பாய்ச்சிடு நீ மேன்மையாக
தாண்டுமே நவலோக மேட்டியோடும்
தாக்கிடவே பணமாகும் தாக்கிப்பாரே. (232)

சிங்கித் தைலம்.

தாக்கிப்பார் கொடுஞ்சிங்கித் தைலஞ்சொல்வேன்
தடையறவே வாலுளுவை புரசுயெட்டி
காக்கியே கஞ்சாவும் புங்குஅத்தி
கனமான அளுஞ்சிபுன்னை வாளமோடு
பாக்கியே வேம்புநீர் வெட்டிமுத்து
பதிவாகக் கழுதைமுள்ளி விரையையெல்லாம்
ஊக்கியே வகைவகைக்குப் படியேயொன்று
உண்மையா யளந்துமே பொடித்திடாயே. (233)

பொடித்துமே கெருடனுட கிழங்குச்சாற்றில்
பேராக ஊறவதைத் திரிநாள்வைத்து
காட்டுமே கல்வத்தி லிட்டுஆட்டு
கனிவாக அதிற்போட மருந்துதன்னை
நாட்டுமே மருந்தினைத்தான் சொல்வேனப்பா
நலமான அரிதாரஞ் சிலையுங்கெந்தி
கூட்டுமே வெடியுப்புச் சீனஞ்கூடன்
குலமாகச் சாம்பிராணி சாரங்கூட்டே. (234)

சாரமுடன் வீரமோடு பூநீர்தானும்
சரியான குங்கிலியம் துருசியோடு
பாரமொடு அன்னமென்ற பேதிதானும்
பதிவாக வகைக்கிரண்டு பலந்தான்ரெண்டு
காரமொடு முன்மருந்தோ டொக்கச்சேர்த்துக்
கனிவாகக் கலந்தரைக்கக் கணக்குக்கேளு
வாரமொடு கெருடனுட கிழங்குச்சாற்றால்
வார்த்தரைத்து யெட்டுநாள் பெழுகுபோலே
கோரமதாய்த் தட்டியே உலரப்போடு
கொடுமையாய்ப் பூப்புடத்திற் றயிலம்வாங்கே. (235)

வாங்கியே பரணிதனி லடைத்துக்கொண்டு
வடிவாக யின்னமுமே மருந்துகேளு
தாங்கியே துருசுவெள்ளை பலமுமொன்று
தப்பாமல் நிருத்துமே தயிலந்தன்னில்
ஏங்கியே பிசறியே வைத்து நீயும்
இதமாக லிங்கத்திற் சுருக்குத்தாக்கு
பாங்கியே மெழுகாகும் மெழுகெடுத்துப்
பதிவாக நவலோகந் தன்னிலீயே. (236)

தன்னிலிட்டு யெடுத்துப்பார் மாத்துமங்கே
தனியான பத்தரைதா ஞணியுண்டோ
உன்னியே திரியாதே தயிலந்தன்னை
உருதிபெறத் தனித்ததொரு மட்டந்தன்னில்
கெண்ணியமாய்ப் பூசியே புடந்தான்போட
கெடியாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பண்ணியே புடமிட்டுப் புடத்துக்குத்தான்
பரிவாக மாத்துத்தா னுயருந்தானே. (237)

உயருமே யிப்படிக்கு மட்டந்தன்னை
உயர்த்தியே விற்றுத்தான் செலவுசெய்து
நயந்துமே கந்திரிக ளாக்கித்தானும்
நலமாகக் கொடுத்துமே பின்னுங்கேளு
பயமில்லா அயச்செப்பு வைத்துத்தேரு
பதியவே செந்தூரம் பண்ணியுண்ணு
தயருமே மேனியது யிருப்புத்தானும்
தாட்டிகமா யாகோபு பகர்ந்தார்தானே. (238)

தானென்ற கொடுஞ்சிங்கித் தயிலத்தாலே
சகலமுந்தான் சித்தியாம் நபிமார்சொல்வார்
கோனென்ற சத்துவகை கோடாகோடி
கொடுப்பினமும் பழுப்பினமு மதிலுங்கோடி
வானென்ற கட்டினமோ அதிலுங்கோடி
வகைகோடி துகைகோடி வழக்கங்கோடி
பானென்ற பத்தியது கோடாகோடி
பாலித்தோ ரதிலும்வெகு கோடிதானே. (239)

கோடிதா னென்றாக்காற் சொல்லக்கேளு
குணமான வாதத்தில் கருத்துப்பூண்டு
நீடியே செய்தாக்காற் பலனுமாகும்
நிலையாகும் அலைச்சலில்லா நேர்மையுண்டு
பாடியே திரிந்ததினாற் பலிதமில்லை
பக்குவமாய்ச் செய்தாக்காற் பத்திமுத்தி
மூடியே சொல்லாதே முடிவுபாரு
முத்திநூல் பார்த்தாக்கால் முதலுமாமே. (240)

முதலாகச் சொல்லவென்றால் வங்கந்தன்னை
முடியவே உழைத்துமே பார்த்தால்நன்றாம்
வதலாகச் சுட்டபணங் கொடுக்கும்பாரு
வடிவான வங்கத்தைக் காணுமாந்தர்
விதமாகச் சுட்டலைந்து கெட்டுப்போவார்
வீரியமாய்ச் சொல்வார்கள் விதமுமில்லை
நதிதனிலே மூழ்கியே அலைவார்போல
நாடியே நூலறியார் வாதிதானே. (241)

வாதிதா னென்றுசொல்லி வாய்ப்பேச்சாலே
வகையாகப் பசப்புவார் வங்கத்திற்றான்
நீதிபோற் சொல்வார்கள் அவனைநம்பி
நெட்ரேந் தனையெடுப்பார் நூலைச்சொல்வார்
பாதியாய் வாதந்தான் வந்ததென்பான்
படிப்படியா யேறுகிற துரையைக்காணார்
சாதிதான் கெட்டவன்போற் பேசுவார்கள்
சரியான பொருளறியார் சவுங்கல்தானே. (242)

சவுங்கல்தான் மெத்தவுண்டு வுலுத்தமாண்பர்
சரியாகச் சொல்வார்கள் பொருளுங்காணார்
நவுங்கலா யுலகத்திற் பொய்கள்சொல்லி
நாட்டியே நான்வாதஞ் செய்வேனென்று
தவம்பெறவே யவன்வீட்டிற் சோத்தையுண்டு
தாகமாய்ப் பொருளெல்லாம் பிடுங்கிவீட்டில்
கவலைகொண்ட மனிதன்போற் கக்கிக்கக்கி
கவலையாய்ப் பேசியே கருதுவானே. (243)

கருதுவா ருலகத்திற் படியாமாந்தர்
 கவலையாய் மிகப்பேசிச் சண்டைகொண்டு
அருதலிபோல் நித்தம்நித்த மழுவான்பாரு
 அருத்ததொரு பலாச்சுளையில் ஈயைக்காணு
ஒருவனவன் விட்டதுண்டோ சொல்லிடுங்கள்
 உலுத்தரச வாதியவன் சொல்வானப்பா
பருகுனது பாற்குடித்த வாரதொக்கும்
 பத்திதா நிசமில்லார் பருவமாமே. (244)

பருவமாஞ் சரக்குகளைச் சுட்டுக்கெட்டுப்
 பாதைதெரி யாமலே பலருஞ்சொல்வார்
உருவமாய் வகைறியார் பொன்னைக்காணர்
 உலுத்தரச வாதிதா ஞடுமாட்டு
கருவமா யென்னைப்போல் கெட்டாயென்று
 கணக்காகச் சொல்லியே புலம்பியேங்கி
தருவமா யுலகத்திற் பேசுவார்கள்
 சண்டாளர் பொய்சொல்லும் வாதிதானே. (245)

தானென்ற பொய்சொல்லும் வாதிக்குத்தான்
 தாட்டிகமாய்ப் படிமண்ணை வாயிற்போட்டு
கானென்ற கள்குடிக்கும் வாதிபேச்சைக்
 கருத்திலே யெண்ணுதே கண்டுகொள்ளு
பானென்ற கஞ்சாவை யுண்டுபின்னும்
 பத்தியாய்ச் சாராய மிகவேயுண்ணும்
நானென்ற ஆணுவங்கள் மிகவேபேசி
 நாடினவர்க் கொன்றுமே பேசிடாதே. (246)

பேசிட்டா லவர்களைத்தா னடிக்கவேண்டாம்
 புறம்பாக அப்பாலே தள்ளிப்போடு
வீசிட்டால் நபிமார்கள் குற்றம்சொல்வார்
 விதமாகப் பாவம்வரும் வாதமில்லை
நேசித்து யெல்லோர்க்கும் நன்மையாக
 நிலையாக யிருந்தாலோ ஒருவர்வந்து
வாசித்து நாட்டிலே யவர்தான்சொல்வார்
 வடிவாக அப்போது அறிந்துகொள்ளே. (247)

அறிந்துமே சாராயம் குடிக்கும்பேர்கள்
அடைவாக அபினியொடு கள்ளுதானும்
நெறிந்துமே யிவர்களுட யிஷ்டம்வேண்டாம்
நிலையாக வாய்ப்பேச்சுச் சொல்லி நீயும்
கறிந்துமே யவரவர்கள் மனதைச்சோதி
கனமாக வுன்மனதிற் கவனம்வைத்து
செறிந்துமே நீசெய்தாற் பலனுமாகும்
சிறப்பான பொருளாகுஞ் செல்வமாமே. (248)

செல்வமாம் வங்கமென்ற சுண்ணம்வைத்தால்
செழிப்பாகும் உலகத்தில் நீதிமார்க்கம்
மல்கவே வங்கத்தை யார்தான்காண்பார்
வையகத்தில் நபிமார்கள் தானுங்காண்பார்
உல்கவே வங்கத்தைக் காணுமூடர்
உலுத்தருக்கு ஒப்பாகும் உறுதிமெத்த
துல்கவே பொருளறியார் பொருளிருந்தால்
துடியாகச் செலவுசெய்வார் சூட்சந்தானே. (249)

சூட்சமாம் புளியுப்பு மார்க்கங்கண்டால்
சுகமாகச் சொர்ணமாம் சத்தோயில்லை
வாச்சபடி அவரவர்கள் நினைத்துத்தானும்
வகையாகக் கோடான கோடிசுட்டு
தாச்சியாய்ச் சொன்னுக்கா வென்னசெய்வோம்
தாட்டிகமாய்க் கைபாக வரிசையாலே
பாய்ச்சினுல் நவலோகம் பழுத்துப்போகும்
பாடுபட்டாற் பெலனுகும் பரிவுதானே. (250)

பரிவாகப் பொருளறிந்தோன் சித்தன்சித்தன்
பலனறிந்தோ னதிலும்வெகு நிபுணனுகும்
விரிவாக வெல்லோர்க்கும் சொன்னுர்கர்த்தன்
வித்தியாச மறியாதான் மாடுமேய்க்கி
கரிபோலக் கண்டதுதான் ஆனையாகும்
கணக்கிட்டோன் பிள்ளையாம் கண்டுகொள்ளு
பிரிவாகப் பிரிமுறுக்கும் பேர்கள்கூலி
பேசரிது யெளியோர்கள் பேசலாமே. (251)

பேசவே மிகவுந்தான் ஆசையில்லார்
பேசரிய நூல்பார்த்தோர் கைபாகங்கள்
நாசவே அறிந்தவர்க்கு வாதமெய்தும்
நானிலத்திற் திமிராகச் சொல்லுவோர்க்கு
கூசவே வாதமில்லை யென்போர்தானும்
குணமாக நினைத்துமே கொள்ளு நீயும்
பாசமற ஆசைதனைப் போக்கித்தானும்
பக்தியாம் வாதமுண்டு பரிவுதானே. (252)

பரிவாக அயத்தினுட செம்பைக்கேளு
பகரரிய ரோமத்தை எண்ணெய்தோய்த்து
விரிவாக அயச்சட்டிக் குள்ளேயிட்டு
விதமாக மூன்றுபத்துப் பலத்தையிட்டு
கரியான துருசதுவும் பலமோபத்து
கைமுறையாய்த் துரிசுதனைப் பிரட்டிவாங்கி
திரிவாக நாற்றமது பலமும்யேழு
திறமான அரபொடியும் பலமும்ரெண்டு. (253)

அயச் செம்பு.

ரெண்டோடு யிதுவெல்லாங் கரண்டியிட்டு
நேரான யெள்ளெண்ணெய் கொஞ்சங்குத்தி
பண்டோடு கொதிக்கவைத்துக் குகையிலிட்டுப்
பதிவாக உருக்கிடவே சத்துமாகும்
முண்டோடு வெங்காரங் கொஞ்சமிட்டு
முடிவாகச் சத்ததனை உருக்கித்திரு
தண்டோடு வெள்ளிவெங் கலம்போலாகும்
தடையறவே பலம்பத்து நிருத்துக்கொள்ளே. (254)

வைத்துமே பின்புதான் வங்கம்நன்றாய்
வளமாக உருக்கியே கன்னிப்பாலில்
சித்துமே தரமேழு சாய்த்துக்கொண்டு
சிறப்பாகக் கரண்டிதனில் வைத்துருக்கி
முத்திபெற விஷ்ணுவின் கரந்தைதானும்
முடிவான யிடைசமன் தூள் பண்ணிக்கொண்டு
நித்தியமாய் வங்கமதின் மேலேயிட்டு
நிலையாகச் சாமம்நால் வருத்திடாயே. (255)

வருத்திடவே மாப்போலே யாகும்பாரு
வளமாகக் கன்னிப்பால் தன்னாலாட்டி
மருத்துமே கதிரில்வைத்துக் காயப்போடு
மயமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
சிருத்துமே முன்சத்து விடையேசேர்த்துச்
செயமாக யிருசாம மரைத்துப்பின்பு
பருத்துமே பெரியபுடம் போட்டெடுத்துப்
பதிவாகக் குகையிலிட்டு உருக்கிடாயே. (256)

உருக்கிடவே யீயம்போ லுருகிநிற்கும்
உத்துமே யெடுத்துப்பஞ்ச மித்திரத்தில்
பருக்கிடவே யுருக்கிச்சாய் கசடுபோகும்
பதிவாக யெடுத்தடிக்க வெட்டையாகும்
நருக்கிடவே மதியெட்டில் வெட்டைரெண்டு
நலமாகச் சேர்த்தூதி பொன்னைச்சேர்த்து
பெருக்கவே ஊதியெடு மாத்துயேழு
பெலமான நபிமார்க ளாடுமாட்டே. (257)

ஆட்டான நபிமாரைத் தொழுதுபோற்றி
ஆதியோ டந்தமாய் நூலைப்பார்த்து
வாட்டான சரக்கெல்லாம் வகைகள்கண்டு
வடிவான பொருளறிந்து மார்க்கமாக
தேட்டான தேட்டதுபோல் வாதமார்க்கம்
திடமாகச் செய்தாக்காற் பலனுமாகும்
மூட்டான மூட்டிதைத்தா னறிந்தஞானி
முனிவான செம்பெடுப்பார் மூனிந்துகாணே. (258)

மூனிந்துபார் யென்னுடைய சாஸ்திரந்தான்
முடிவான அட்டவணை வரிசைகேளு
கனிந்துபார் வைத்தியந்தான் யெழுநூறுசொச்சம்
கனிவாகப் பஞ்சமித் திரமுன்னூறு
நனிந்துபார் களங்கம்ரெண்டு காண்டந்தானும்
நலமாக அறுநூறும் நாடிச்சொன்னேன்
பணிந்துமே சுருக்கம்நூற் றன்பத்தைந்து
பதிவாக அதைக்குருக்கிச் சூத்திரந்தானே. (259)

சூத்திரந்தான் பதினாறு அதைக்குருக்கிச்
சுருதிபெற யெட்டொன்று சொன்னேனப்பா
பத்திரமாய்ச் சுண்ணமென்ற காண்டந்தானும்
பதிவான அறுநூறு அதைக்குருக்கி
காத்திரமாய்ச் சுண்ணமூன் னூறுபாடிக்
கனிவாக யிதைக்குருக்கி நூற்றன்பத்தைந்தாய்
ஏத்தியே பாடினேன் தண்டகந்தான்
இதமாக நூருகப் பாடினேனே. (260)

பாடினேன் யேழையாம் வாதிக்குத்தான்
பதிவாக யென்னூலை யெல்லாம்பார்த்து
கூடியே கருத்துவைத்துப் படித்துப்பார்த்துக்
குணமாக ஒருமனதாய் ஒக்கப்பண்ணி
நீடியே முன்னேதான் வங்கஞ்செய்து
நிலைத்துமே சத்துதனிற் செம்பெடுத்து
வாட்டியே மதிதனிலே தாக்கிப்பின்பு
வகையாக உண்டுநீ மார்க்கங்கேளு. (261)

மார்க்கமாய்ப் பின்னேதான் செந்தூரத்தை
வடிவாகச் செய்துமே விற்றுநீயும்
ஏர்க்கவே செலவுக்கு வைத்துக்கொண்டு
இனிதான செந்தூரந் தானுமுண்ணு
பார்க்குள்ளே காயசித்தி பண்ணிநீயும்
பதிவான யேழைக்குக் கொஞ்சமீய்ந்து
மூர்க்கமாய்த் திரியாதே முடிவுகண்டு
முத்திபெற நபிமாரை வணங்குவாயே. (262)

வணங்கவே தன்னைத்தான் வணங்கிநீயும்
வகையாக யேற்கேநீ மனதுவைத்து
இணங்கியே கால்மடித்துத் தொழுதுகையை
இனிதாகக் கண்தனிலே ஒத்திநீயும்
குணங்காமற் குப்புறத்தான் படுத்தெழுந்து
கூறியே சேவித்துக் குணமதாக
கனமாக ஓதிடுநீ ஆண்டவன்தான்
கருத்துறவே வாதங்கள் சொல்லுவாரே. (263)

சொல்லுவா ரவரவர்க்குத் தக்கதாகச்
சுருதிமுறை தெரியவே செய்துவைப்பார்
மெல்லுவார் சகலசம் பத்துதானும்
மென்மேலுங் கொடுத்திடுவார் மேகம்போலே
நல்லுவார் மகமதுதான் முன்னேவந்து
நாடியே சொல்லிடுவார் நாட்டிலோர்க்கு
வெல்லுவார் தொட்டதெல்லாஞ் சித்தியாக
வேடிக்கை யாகவே திரியலாமே. (264)

திரியவே அண்டரண்ட பதங்களெல்லாஞ்
சித்திக்க வேணுமென்று சத்துப்பாரு
அரியவே வங்கத்தை அனைத்தும்பாரு
அதின்பின்பு செந்தூரஞ் செய்துபாரு
பிரியமா யதின்பின்பு சுண்ணம்பாரு
பிரட்டில்லை வாதசித்தி வந்துகூடும்
விரிவாகப் பேசாதே சூஸ்திரத்தை
வினையமாய்ப் பார்த்திடவே சித்தியாமே. (265)

சித்தியா மாருக்கு நபிமாருக்குச்
செகமெய்க்கும் புத்தியுள்ளோர் தீர்க்கவானும்
பத்தியாய் வாதத்தைப் பார்த்தவர்க்குப்
பதிவான உறுதியுள்ளோர் தங்களுக்கு
நித்தியமாய் நூல்பார்த்த வாதிக்குத்தான்
நேரான செம்பறிந்து நிலைத்தபேர்க்கு
முத்திவரு மென்றுசொன்னர் யாகோபுதானும்
மூர்க்கமாய் வாதசித்தி யெய்துந்தானே. (266)

திராச் சேர்த்துரம்.

தானென்ற யின்னமொரு திராவின்மார்க்கம்
தடையறவே சொல்லுகிறேன் தன்மையாக
ஊனென்ற திராவதுதான் பலமும்பத்து
உருதிபெறக் காண்டிதனில் வைத்துருக்கி
கானென்ற யிடைக்குமஞ்ஞே சிலையைத்தாக்கு
கணக்காக உடையுமது கருதக்கேளு
நானென்று திரியாதே கல்வத்திட்டு
நலமான புகைநீராற் சாய்மாட்டே. (267)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் பெரியபுடம் போட்டுவாங்கி
நீட்டியே கல்வமிட்டுப் பின்பு நீயும்
நிலையாக ரசபதங்கம் பாதிசேர்த்து
கூட்டியே புகைநீரா லரைநால்சாமம்
குணமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
தாட்டிகமாய் மேற்கவசம் சொல்லக்கேளு
தடையில்லா வுப்போடு சுண்ணந்தானே. (268)

தானேதான் ரெண்டுமுறை வில்லைமேலே
தாட்டிகமாய்க் கட்டியே உலரவைத்து
வானேதான் குக்குடமாய்ப் போட்டெடுக்க
வடிவாகப் பார்த்திடவே செந்தூரமாகும்
ஊனேதான் மதிதனிலே பத்துரெண்டு
உறுதியாய்ச் சேர்த்துருக்கித் தங்கமொன்று
கானேதா னூதிடவே மாத்துக்கேளு
கனிவான வயதேழு காணுந்தானே. (269)

காணுமே செந்தூரங் குன்றியுண்ண
கருதியே நரம்பிறுகு மேனிதானும்
வேணுமே விந்திறுகும் தேகந்தானும்
விதமாகக் கற்போலே யிறுகும்பாரு
வாணுமே போர்ப்பெலனு மதிகமாகும்
வடிவான செவ்வலரி போலேகண்கள்
தோணுமே யிருட்டறையில் கண்துலங்கும்
சுருதிபெற யாகோபு சோதித்தேனே. (270)

சோதித்தேன் நரைதிரைக ளற்றுப்போகும்
சுருக்காக வாலைபோல் தேகமாகும்
வாதித்த பெண்ணோடே சேரலாகா
வடிவான காயமது யுறுகிப்போகும்
நீதியாய்க் குதிரைபோல் வேகமுண்டு
நிலத்தநபி மார்போலே யிருக்கலாகும்
சாதிபல பேதத்தைத் தள்ளிப்போடு
சதாநித்தம் ஆண்டவரைத் தொழுதிடாயே. (271)

தொழுதிடவே வாதசித்தி உடனேயாகும்
தொல்லுலகில் ரசவாத மேவல்கேட்கும்
பழுதில்லா நோயெல்லாந் தவிடுபொடியாகும்
பாதையிதில் ரெம்பவுண்டு பத்தியாகும்
உழுதுபயி ரிட்டதுபோல் பலன்கொடுக்கும்
உற்றுமே செல்வம்வரு முலகத்தோர்க்கு
அழுதுமே திரிந்தாலே யென்னலாபம்
ஆதியாம் வெடியுப்பை யண்டிப்பாரே. (272)

பித்தளைச் செந்தூரம்.

அண்டவே ஆர்கூட மார்க்கஞ்சொல்வேன்
ஆண்மையாய்ச் சொல்லுகிறே னறிந்துபாரு
பண்டிடவே பித்தளைதான் பலமுமெட்டு
பதிவாக யிலுப்பைநெய்யி லுருக்கிச்சாய்த்து
கண்டிடவே பத்துதரம் சாய்த்துக்கொண்டு
கசடகற்றி யெடுத்துமே குகையிலிட்டு
தொண்டுசெய்வார் போலவே தாளகத்தைச்
சுண்ணம்பில் வைத்தெரிக்கச் சூட்சமாமே. (273)

எரித்துமே யிருசாமங் கடந்தபின்பு
ஏழைமதி போகாம லெடுத்துநீயும்
வரித்துமே முன்சுத்தி செய்துவைத்த
வடிவான பித்தளையைக் குகையிலிட்டு
பரித்துமே உருக்குமுகந் தன்னிலேதான்
பலமாக யிடைசமனுய்த் தாளகத்தை
பிரித்துக்கொண்டு உள்வாங்கி உடையும்நன்றுய்ப்
பேர்பெருக யெடுத்துநீ பின்புகேளே. (274)

பின்புதா னெடுத்துமே சொல்லக்கேளு
பேசரிய கல்வத்தி லிட்டுநீயும்
தென்பாக ரசபதங்க மிடையேசேர்த்துத்
திறமான புகைநீரால் சாமமாட்டி
தன்பாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
தடையறவே கவசமதைச் சாற்றக்கேளு
வன்பாக அரைபொடிதான் பலமுப்பத்து
வகையான வெண்காரம் பலமும்பத்தே. (275)

பத்தாக யிதுரெண்டுங் கல்வத்திட்டுப்
பழச்சாற்ருல் சாமந்தா னரைத்துநீயும்
முத்தாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
முனிவான கரிபோலே உருகிநிற்கும்
சித்தாக வதைபரைத்துப் பழச்சாற்ருலே
சிறப்பாக வில்லைதட்டிக் கவசமிட்டு
நத்தியே காயவைத்துச் சேவலென்ற
நாடியே புடமிடவே நன்மையாமே. (276)

நன்மையாய்ப் புடமிட்டு யெடுத்துப்பாரு
நலமாகச் செந்தூர முருக்கம்பூவாம்
வண்மையாய் மதியெட்டில் ரெண்டுசேரு
வளமாகத் தங்கமொன்று சேர்த்துருக்கி
பண்மையா யூதியெடு பச்சையாகும்
பரிவாகத் தங்கமாம் பரிவுமெத்த
உண்மையா யிருக்குமந்தத் தங்கந்தன்னை
உலகறிய விற்றுமே செலவுசெய்யே. (277)

செய்யவே யிச்சொத்தை வறுமையாக
சிறப்பாக உண்டிட்டுச் செந்தூரத்தை
பய்யவே வைத்துமே உண்டுதேரு
பத்தியமாய்ப் பாகமாய் உண்டுதேரு
நய்யவே நபிமாரை வணங்கியேத்தி
நானிலத்தி லிருந்துமே தருமஞ்செய்து
கைபாக மாகவே செய்துகொள்ளு
கனிவாக விதியாளி காணுவானே. (278)

காணுவான் புத்தியுள்ள வாதிதானும்
கடைகெட்ட வாதிதான் காணமாட்டான்
பேணுவான் பொய்சொல்லா னிலைத்தவாதி
போக்கோடே பொய்சொல்வோர்க் கில்லையில்லை
தாணுவா யலைவோர்க்கு யில்லையில்லை
தடையின்றிச் சொல்வோர்க்கு மெய்திடாது
பூணுவார் ஆசையுள்ள வாதிக்குத்தான்
புகலரிய வாதமில்லை பேசினேனே. (279)

பேசினேன் கடைசிதனில் செந்தூரத்தைப்
பிரியமாய்ப் போக்கோடே வைத்துநல்ல
வாசினையாய்க் கைபாக வரிசையாக
வைத்துமே செய்தாக்கால் சித்தியுண்டு
காசினையாய் அவசரத்தில் செய்வாயாகில்
கணக்கான சித்தியில்லை கண்டுகொள்ளு
பாசிதான் நீர்தனிலே மூடினாப்போல்
பாவிக்கும் அவசரத்தின் பதிவுதானே. (280)

சாரக் கட்டு.

பதிவாக யின்னுமொரு சாரக்கட்டு
பதியவே சொல்லுகிறேன் பக்தியாக
நிதியான சாரமது பலமும்நாலு
நிலையாக அண்டம்போற் சீவிக்கொள்ளு
மூதியான வெள்ளீயம் சட்டியிட்டு
மூனிந்துமே அண்டோடு யிடையேயிட்டு
விதியாகக் கிண்டிடவே கரிபோல் நிற்கும்
வினையமாய்க் கல்வத்தி லிட்டுக்கேளே. (281)

இட்டுமே வெண்கருவாற் சாமமாட்டி
இதமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நட்டுமே உலையில்வைத்து ஊதித்திரு
நலமான கடுஞ்சுண்ண மாகும்பாரு
பட்டுமே கல்வத்தி லிட்டுநீயும்
பதியவே வெண்கருவா லரைத்துவில்லை
கட்டுமே கதிரில்வைத்து ஊதித்திரு
கடுவங்கச் சுண்ணமது வாகும்பாரே. (282)

ஆகுமே முன்சாரக் கட்டிமேலே
அடைவாக அரைத்துமே கருவாற்பூசு
நாகுமே பெரும்பூச்சாய்ப் பூசிநல்ல
நலமாகக் கதிரில்வைத்துப் பின்புகேளு
ஏகுமே ஒருசட்டி தன்னிலேதான்
இதமாகக் கிளிஞ்சிலென்ற சுண்ணந்தானும்
பாகுபெறப் படிரெண்டு அளந்துவிட்டுப்
பக்குவமா யதன்மேலே உண்டைவையே. (283)

உண்டைவைத்து அதன்மேலே கிளிஞ்சில்நீறு
உறுதிபெறப் பரப்பியே அமுழ்த்திநீயும்
பண்டைமுன்போல் அடுப்புதனி லேத்திமூடிப்
பதிவாகச் சிறுகயெரி திமட்டாக
கண்டைபோ லிருசாம மெரித்துவாங்கு
கனிவாக யெரிபிரித்துப் பார்த்துநீயும்
வண்டமாய்க் கவசமது பிரித்துப்பாரு
வடிவாக உருகியது கட்டுந்தானே. (284)

நாகக்கட்டுச் செந்தூரம்.

கட்டுமே ஆனையுட தந்தம்போலே
கனிவாக யெடுத்துமே அப்பால்வைத்து
நட்டுமே நாகமது பலந்தாஞென்று
நாடியே இலுப்பெண்ணெய் தனிலுருக்கி
முட்டுமே மூவேழு தரமுஞ்சாய்க்க
முடிவாகக் கசடகலும் முனிந்துபாரு
செட்டுமே குகையிலிட்டு உருக்கிநீயும்
சீரான சாரத்தை முகத்தில்தூவே. (285)

தூவவே நாகமது கண்விட்டாடும்
துடியான புகைதானு மடங்கிநிற்கும்
காவவே நாகமது கரியில்நின்று
கண்விட்டு ஆடிவிடும் நாகந்தானும்
பாவவே கட்டினதோர் நாகந்தானும்
பதிவாகப் பலம்நாலு குகையிலிட்டு
தாவவே உருக்குமுகந் தன்னிற்கேளு
தாட்டிகமாய்த் தங்கமது பலமும்நாலே. (286)

பலம்நாலு ரெண்டுமொன்று யுருக்கிநீயும்
பாகுபெறக் கல்வத்தி லுடைத்துக்கேளு
கலநாகக் கெந்தியது பலமும்நாலு
கணக்காகச் சூதமது பலமும்நாலு
தலமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
தான்வழித்துக் காசியென்ற மேருக்கிட்டு
உலமாகப் பனிரெண்டு சாமந்தீதான்
உறுதியா யெரியிட்டுப் பின்புவாங்கே. (287)

வாங்கியே புகைநீரைப் பின்புவிட்டு
வடிவாக அதைவறுத்துச் சொல்லக்கேளு
ஆங்கியே திரியாமல் மேருக்கிட்டு
அடியாகப் பன்னிரண்டு சாமந்திதான்
பாங்கியே யெரியிட்டு உடைத்துப்பாரு
பதிவாகச் சிசந்தூர முருக்கம்பூவாம்
தாங்கியே நபிமாரைத் தொழுதுபோற்றித்
தாக்கிடவே நவலோகம் நூற்றுக்கொன்றே. (288)

ஒன்றாகத் தொழுதிடவே மாத்துக்கேளு
உறுதியாய்ப் பதினாறு மாற்றுக்காணும்
கன்றாக விற்றுமே செலவுசெய்து
கந்திரிக ளாக்கியே சோறுதன்னை
பன்றாக எல்லோருக்குங் கொடுத்துப்பின்பு
பதிவாகத் தொழுதுநீ பாரிலேதான்
நன்றாகப் பள்ளிவா சலைத்தான்கட்டி
நாடியே நபிமார்போ லிருந்துவாழே. (289)

இருந்துமே செந்தூரங் குன்றியுண்ண
இதமாக மண்டலத்திற் காயசித்தி
பருந்துமே லோகசித்தி சனத்தில்சித்தி
பதிவாக நரைதிரைக ளற்றுப்போகும்
வருந்தியே திரியாமற் சித்திமெத்த
வடிவான நாகசெந் தூரந்தன்னை
நருந்துமே நாடியே வைத்துநீயும்
நலமாக வுண்டுபார் நாட்டிலோரே. (290)

நாட்டிலே உண்டிடவே நரைகள்போகும்
நாடியே விந்திறுகும் மேனிதங்கம்
பாட்டிலே சொன்னதுபோல் வைத்துநீயும்
பதிவாக உண்டிடவே பலனுமாகும்
ஏட்டிலே யெழுதிவைத்த படியேசெய்து
இதமாகப் பாகமது உறுதியாக
கூட்டியே செய்துபார் குணமதாகும்
கூடியொரு காரியத்தைச் செய்துபாரே. (291)

செய்திடவே நாகத்தின் வர்ணம்போலச்
சிறப்பாகக் கண்டதொரு கனியுமாகும்
மெய்திடவே சனபேதி சத்தபேதி
வெற்றிபெறப் பொருளாகுஞ் செய்துபாரு
வைதிடவே வர்ணங்கள் ரெம்பவுண்டு
வாதாடிச் சண்டைகொண்டு வழக்குச்செய்து
நைதிடவே பாகமாய்ச் செய்துநீயும்
நாடியே யிருந்து நீ வாழ்வாய்காணே. (292)

வாழவே நாகசெந் தூரந்தன்னை
வைத்துமே சீவனங்கள் மிகவேசெய்து
நாழவே கன்னியா குமரிக்குத்தான்
நாடியே ஒத்தாசை மிகவுஞ்செய்து
பாழவே சுண்ணங்கள் மிகவுஞ்செய்து
பதிபாக மாகவே யிருந்துநீயும்
காழவே உலகத்திற் கனிந்துவாழு
கனிவாகப் பொருளறிந்தால் கணக்குமாமே. (293)

கணக்காக மெய்யறிந்த வாதிதானும்
கருதியே பொருளறிவான் கண்டுகொள்வான்
தனக்காகத் துயரமில்லை பொருளைக்காண்பான்
தாட்டிகவான் வாதங்கள் பண்ணிப்பார்ப்பான்
உனக்காக ஒருவரிடஞ் சொல்லமாட்டார்
உறுதியாய்ப் பேசுவார் உற்றுப்பாரார்
குணக்குத்தான் வாராமற் பேசுவார்கள்
குடிகெடுப்பு யில்லார்கள் குணமுமாமே. (294)

குணமாக நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தானசைத்துத் தொழுவாரப்பா
பணமாக ரெம்பவுந்தான் செய்வாரப்பா
பத்திமுத்தி வயிரமா யிருப்பாரப்பா
துணமாகச் சைதன்ய யோகஞ்செய்வார்
தொல்லுலகில் ரசவாதத் தொழிலுஞ்செய்வார்
உணவாக நம்பியே செய்வாரப்பா
உத்துமெள்ளச் செம்பைத்தா னெடுப்பார்பாரே. ()

எடுப்பார்க ளறிவுள்ள நாயன்மார்கள்
இதமாகப் பொய்சொல்லார் நிலைத்தவாதி
அடுப்பார்கள் கெவுனசித்து ஆடுவார்கள்
ஆண்மைதிமிர் ரெம்பவுண்டு அன்புபெற்று
படிப்பார்கள் பலகலைநூல் பக்திமிக்க
பரிவுடனே நிலையாக பக்திசெய்வார்
கொடுப்பார்கள் ரசவாதத் தொழிலைச்செய்வார்
குற்றமற விருப்பார்கள் கூடுவாரே. (296)

கூடுவார் வெகுபேர்கள் நபிமார்தானும்
கூக்குரலாய்ப் பேசார்கள் வாதந்தன்னைத்
தேடுவார் மவுனமா யிருந்துகொண்டு
திடமாக நூலைத்தான் வசனிப்பார்கள்
பாடுவார் வசனத்தைக் கேட்டுக்கேட்டுப்
பத்தியுடன் சரக்கைத்தான் சோதிப்பார்கள்
நாடுவார் செந்தூர மிகவுஞ்செய்வார்
நானிலத்தி லவர்பேரு விளங்கத்தானே. (297)

விளங்கவே மக்காவின் தேசந்தன்னில்
விடுபட்ட நபிமார்கள் கோடாகோடி
அளம்பவே பொன்செய்வார் வெள்ளிசெய்வார்
அடைவாக அயச்செம்பை யெடுப்பாரப்பா
களம்புவார் பூனீறு மிகவெடுப்பார்
காரியமாய்ச் சவுக்காரஞ் செய்வார்பாரு
தளம்பவே துருசதுவை நீற்றுவார்கள்
தாளகத்தை நீத்தியே தாக்குவாரே. (298)

தாக்கியே வெடியுப்புச் சுண்ணஞ்செய்வார்
சரியாகச் சரக்கெல்லாங் கட்டி நீற்றி
பாக்கியமாய் நவலோகந் தன்னையெல்லாம்
பதிவாகப் பழுக்கவைப்பார் பக்திமுக்தி
நோக்கியே தொழுவார்கள் நுணுக்கப்பார்ப்பார்
நொடிக்குள்ளே சகலமெல்லாஞ் சித்திசெய்வார்
தூக்கியே கெவுனமதில் பறப்பாரப்பா
துடியான நபிமாரை வணங்குவாரே. (299)

வணங்குவார் பொருளறிவார் மார்க்கமாக
வடிவாக அயச்செம்பு செய்வார்பாரு
இணங்குவார் ரசக்குளிகை காட்டுவார்பார்
இதமாகச் சூரபிமணி செய்வாரப்பா
கணங்குவார் தர்மங்கள் மிகவுஞ்செய்வார்
காரியமாய்த் தாம்பூரச் சுண்ணஞ்செய்வார்
குணங்காமல் மலைகளிலே சஞ்சரிப்பார்
கூரறிவா யிருந்திடுவார் கொள்கைதானே. (300)

கொள்கையாய் நபிமாரைத் தொழுதுபோற்றிக்
குண்டலியைத் தானசைத்துத் தீன்தீனென்பார்
வள்கையாய் ரொட்டிதின்பார் சந்தோஷிப்பார்
வாதங்கள் மிகச்செய்வார் வருத்தமில்லார்
உள்ளபடி செய்துமே கடையில்விற்பார்
உற்றுணர்வார் நூல்மர்மங் கண்டுதேறி
அள்கையாய் சந்தோஷ மிகவேசெய்வார்
ஆடுவார் பாடுவார் நபிமார்தானே. (301)

தானென்ற சகலநூ லெல்லாம்பாடிச்
சமுசயங்க ளில்லாமற் சுண்ணக்காண்டம்
வானென்று பாடியே வாதமெல்லாம்
வகைகண்டு துகைகண்டு வருத்தமில்லா
நானென்று கைபாக வரிசைசொன்னேன்
நாதாக்கள் நபியினுட வழக்கம்பாடி
சானென்ற அறுநூறைக் குருக்கிநானும்
சரியாகப் பாடுமின்னூல் மூந்நூறுமுற்றே. (302)

யாகோபு சுண்ணம் கூ00.

— முற்றிற்று. —

உ

பரமபதி துணை.

ஓலை யேட்டுச் சுவடிகளிலிருந்து புதிதா யச்சிட்டிருக்கும்

அகத்திய முனிவர் பாடியுள்ள

புத்தக விளம்பரம்.

அகத்தியர்	பரிபூரணம் 1200,	2	0	0
ஷை	பூரணம் 205.	0	8	0
ஷை	பூரணம் 216.	0	8	0
ஷை	கற்ப மூப்புக் குருநூல்.	0	10	0
ஷை	கௌமதி நூல் 400.	0	12	0
ஷை	தற்க சாஸ்திரம் 300.	0	10	0
ஷை	பன்னீராயிரச் சூஸ்திரமான பன்னிரு காண்டம்.	0	8	0
ஷை	பரிபாஷை 300.	0	8	0
ஷை	மணக்கோலம் 200, கனகமணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, மானிடர் இறுக்குகள் என்னும் கிரிகை 64 ஆக ஐந்து சாஸ்திரங்கள்	0	12	0
போகர்	கற்பம் 300.	0	10	0
திருவள்ளுவர்	கற்பம் 300 ம் ஷையார் ஏழு சாஸ்திரங்க ளடங்கியது	0	14	0
புலஸ்தியர்	கற்பம் 300.	0	10	0
யாகோபு	கோர்வை 17 சாஸ்திரங்கள் அடங்கியது. விலை ரூபாய்	9	0	0

இன்னும் அனேக சித்தர் சாஸ்திரங்களும் மற்றும் அநேக புஸ்தகங்களும் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பக்கூடும்.

☞ குரு. இராமசாமிக்கோன்

புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

யாகோபு சாஸ்திரங்கள்.

இவர் முன்னால் இராமதேவரா யிருந்தவர் மக்கா தேசம் போய் நபிமார்களுடன் சேர்ந்து யாக்கோபு என்று பெயர் பெற்றிருக்கும்போது பாடிய நூல்களின் விபரம்.

	யாகோபு வயித்திய சிந்தாமணி 700ம் அதற்கு சூஸ்திரம் 50ம் சேர்ந்தது விலை ரூ	1—2—0
ஷை	சுண்ணக்காண்டம் 600	1—0—0
ஷை	வாதசூஸ்திரம் 400	0—12—0
ஷை	லோகச் செந்தூரம் 300	0—8—0
ஷை	ஷை செந்தூர சூஸ்திரம் 150ம், அதற்கு சூஸ்திரம் 50ம், சேர்ந்தது	0—8—0
ஷை	சுண்ணம் 300	0—8—0
ஷை	சுண்ண சூஸ்திரம் 155ம், ஷை 55ம் சேர்ந்தது	0—8—0
ஷை	பஞ்சமித்திரம் 300	0—8—0
ஷை	வகாரக்களங்கு என்னும் வாத வைத்தியம் 300	0—8—0
ஷை	வைத்தியம் 300 சரக்கு சுத்தியும் நாடி விபரமும் சேர்ந்தது	0—8—0
ஷை	தண்டகபட்சணி 110ம், எடைபாகம் 16ம், கைபாகம் 16ம், சேர்ந்தது	0—8—0
ஷை	இந்த பதினேழு சாஸ்திரத்திற்கும் திறவு கோலான வைத்தியக் கல்லாடம் அரும்பத உரையுடன்	0—12—0
	இந்த சாஸ்திரங்கள் பதினேழும் சேர்ந்த யாகோபு வைத்தியக் கோர்வை கலிக்கோ பயிண்டு பெரிய புக்	9—0—0